# நொடிக்கு நொடி

-ஆர்னிகா நாசர்

கண்ணாடி நதி ஒன்று
கற்பூர மலை ஒன்று
கண்களின் கண்ணி ஒன்று
பூக்களின் தொட்டில் ஒன்று
வைரமணி மேகம் ஒன்று
அன்னப்பட்சியின் இறகு ஒன்று
யாவும் நீயாய் நின்று

- பா. சத்தியமோகன்

## 1

ரோஜா திரவம் ததும்பும் சமுத்திரம்.

சமுத்திரத்தில் நடந்து வருகிறாள் பூங்கொடிச் சமுத்திரத்தின் திரவம் பாதி நீர்ப் பொருளாய் பாதி, திடப் பொருளாய் பூங்கொடியின் காலடிகள் சிக்குகின்றன.

குத்துக் காலிட்டு அமர்கிறாள்.

அவளது உதடுகள் மந்திரம் முணுமுணுக்கின்றன.

சமுத்திர திரவத்தை எடுத்துக் கை தேர்ந்த குயவனைப் போல ஒரு குழந்தைப் பொம்மை மெழுகிச் செய்கிறாள். செய்து முடித்ததும் குழந்தைப் பொம்மையைத் தரையில் இடுகிறாள். குழந்தை உயிர்த்து "ங்கா" என்றபடி தவழ்ந்து போகிறது.

தொடர்ந்து குழந்தைப் பொம்மை தயாரிப்பில் ஈடுபடுகிறாள்.

ட்ரில்லியன் ட்ரில்லியன் குழந்தைகள் பூங்கொடியைச் சுற்றி.

சிறிது கர்வம் தலைக்கேற, புதிய குழந்தைப் பொம்மையை உருவாக்குகிறாள். திடீரென்று பொம்மையின் தலைப்பகுதி உடைந்து விழுகிறது. தனியே விழுந்த தலை ஓலமாய் அழுகிறது. இப்போது அழுகை மற்றக் குழந்தைகளையும் தொற்றிக் கொள்கிறது. பூங்கொடியின் செவிப்பறை அதிர்கிறது. இரு காதுகளையும் பொத்தியபடி வீறிடுகிறாள் பூங்கொடி.

கனவு கலைகிறது. விழிநிலைக்கும் உறக்கத்துக்கும் இடையே தத்தளித்தபடி எழுந்து அமர்கிறாள் பூங்கொடி. தான் கண்டது கனவுதான் என்பதை அவள் உணரப் பல நொடிகள் பிடித்தன.

எழுந்தாள் பூங்கொடி. ராசாத்தி நைட்டியில் இருந்தாள். வயது 24, நடிகை தேவயானி சாயல், மகப்பேறு மருத்துவம் படித்தவள்.

மீண்டும் கனவினை முழுதாக யோசித்துப் பார்த்தாள். பாதிப் பகுதி அழிந்து போயிருந்தது. குளியலறைக்கு நடந்தாள். பல் துலக்கினாள். பாத் டப்பில் திரவ சோப் நிறைத்தாள். பாத் டப்பில் அமர்ந்து, சறுக்கி, கவிழ்ந்து, மூழ்கி, உருண்டு, மிதந்து குளித்தாள். சோப் நுரை அள்ளிக் காற்றில் ஊதினாள்.

குளியல் முடித்தெழுந்தாள்.

நீர்க் காலடி சலக்க சலக்க நடந்து சென்றாள். பூத்துவாலை எடுத்து உடல் துவட்டிக் கொண்டாள். உள்ளாடை அணிந்து கொண்டு புதிய நைட்டிக்கு மாறினாள். குளியறையிலிருந்து வெளிப்பட்டாள்.

அப்பா மருதநாயகமும் அம்மா தெய்வநாயகியும் மகளுக்காகக் காத்திருந்தனர். "குட்மார்னிங் டாடி! குட்மார்னிங் மம்மி!"

"குட்மார்னிங் பூங்கி!"

பெற்றோர் கால்களில் விழுந்தெழுந்தாள் பூங்கொடி.

"அமோகமா இருப்பம்மா. உன் புதிய முயற்சி மெஹா வெற்றி பெறும்!"



"தாங்க்யூ டாடி! (சில நொடி மௌனித்து) கிளினிக் திறப்பு விழா ஏற்பாடுகளை முடித்து விட்டீர்களா?"

"ஏறக்குறைய முடித்துவிட்டேன். நகரின் முக்கியமான பள்ளிகளிலிருந்து ஆயிரம் கிண்டர்கார்டன் குழந்தைகள் வருகின்றன. விரும்பிய குழந்தைகளுக்கு கார்ட்டூன் கேரக்டர்ஸ் ஒப்பனை செய்துவிடச் சொல்லியிருக்கிறேன். நமது பிரதம விருந்தாளி டிடக்டிவ் தேஜஸ்வினி சரியாக 9.50 மணிக்கு கிளினிக்குக்கே வந்துவிடுவதாக போனில் கூறினார். விழாவுக்கு வரும் குழந்தைகளுக்குப் பரிசளிக்க பார்பி பொம்மைகள் வாங்கி வைத்திருக்கிறேன். கிளினிக்கின் உட்சுவர் முழுக்க வகை வகையாய்க் குழந்தைகள் ப்ளோ-அப். மொத்தத்தில் சென்னையிலுள்ள அனைத்துத் தனியார் மகப்பேறு மருத்துவ மனைகளைவிட நமது மகப்பேறு மருத்துவமனை மிகப் பெரியது; முழுமையானது; அதி நவீன தொழில் நுட்பங்கள் கூடியது என்று திறப்பு விழாவுக்கு வரும் ஒவ்வொருவரும் கூறுவார்கள்." தந்தையின் குரலில் கர்வமில்லாத பெருமை வழிந்தது.

"ஒரு மகப்பேறு மருத்துவமனை திறக்க இத்தனை ஆடம்பரம், படாடோபம் தேவையா?"

"உன் அக்கா பொற்கொடி தலைப் பிரசவத்தின் போது தகுந்த மருத்துவ உதவி இல்லாமல் குழந்தையுடன் இறந்துபோனாள். அந்தத் துர்பாக்கியம் இனி எந்தக் கர்ப்பிணிப் பெண்ணுக்கும் வரக்கூடாது. ஒவ்வொரு பெண்ணும் தலைப் பிரசவத்தில் இயேசு கிறிஸ்துபோல் மரித்து உயிர்த்தெழுகிறாள். கடவுள் பெண்மைக்கு அளித்த விலையுயர்ந்த பரிசுதான் தாய்மை. பரிசு சாபமாகி விடக்கூடாது. உலகிலேயே இந்தியாவில்தான் பிரசவத்தால் நிகழும் பெண்கள் மரணம் அதிகம். அதனை பூஜ்யத்துக்கு குறைக்க ஒவ்வொரு மகப்பேறு மருத்துவரும் உண்மையாய்ப் பாடுபடவேண்டும். உன் பங்குக்கு நீயும். அதனைச் சாதிக்கும் பொருட்டுத்தான் ஐந்து கோடி ரூபாய் செலவில் மல்லிகை மகப்பேறு மருத்துவமனையைக் கட்டியிருக்கிறேன். கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்திருக்கிறேன்!.

"உங்கள் எதிர்பார்ப்பை மெய்யாக்குவேன் டாடி!"

"உன்னுடன் படித்துத் தேர்வான ஐந்து தோழிகளை உன் சக மருத்துவர்களாக நியமித்திருக்கிறேன். சமிதா, விஜி, பாவனா, ஆனி, கங்கை. ஆறு திருமணமாகாத நங்கைகள் திருமணமான பெண்களுக்குப் பிரசவம் பார்க்கப் போகிறீர்கள்!" சிரித்தார் அப்பா.

பத்தாம் வகுப்புப் படிக்கும் தம்பி இளஞ்செழியன் உற்சாகமாகக் குறுக்கிட்டான். "எல்லாம் அக்கா பிசாசுக்கே செய்யுங்க. ஏன் எனக்கொரு பிரசவ ஆஸ்பத்திரி கட்டித் தரக்கூடாதா? நான் பிரசவம் பார்க்க மாட்டேனா?"

"நீயும் பூங்கொடி போல ஏதாவது படித்து முடி. உனக்கு வேண்டியதைச் செஞ்சு தருகிறோம். தவிர ஆண் மகப்பேறு மருத்துவர் தமிழ் நாட்டில் மிகக் குறைவுடா தம்பி. ஆண் மருத்துவரிடம் மருத்துவம் பார்க்கத் தமிழ் நாட்டுப் பெண்கள் சங்கோஜப்படுவார்கள்! நம் தமிழ்ப் பண்பாடு அப்படி!"

"டோண்ட் ஒர்ரி டாடி. பிரசவம் பார்க்கும்போது பொம்பளை வேஷம் போட்டுக்கறேன்."

"அதிகம் பேசுகிறாய். போ போ... போய் கிளினிக் திறப்பு விழா வேலைகளைக் கவனி!" அப்பா செல்லக் கோபமாய் விரட்டினார்.

அம்மாவும், அப்பாவும் அவர்களது படுக்கையறைக்கு நடந்தனர். "நாங்க ட்ரஸ் சேஞ்சு பண்ணிட்டு வர்றோம்மா!"

வரவேற்பறை சோபாவில் வந்து அமர்ந்தாள் பூங்கொடி. மனம் ஏனோ படபடத்தது. எல்லாம் இன்றைக்குச் சரியாக நடக்குமா? ஏதோ ஒரு அசம்பாவிதம் கறுப்பு சம்பவம் நடக்கப் போவதாக உள்ளுணர்வு எச்சரிக்கிறதே! நாம் கண்ட கனவில் கூட ஒரு செய்தி ஒளிந்திருந்ததே - அதென்ன?

பெற்றோர் வெளிப்பட்டனர். அப்பா பட்டு வேட்டி, பட்டுச் சட்டை, பட்டுத் துண்டுடன் மிடுக்காய்க் காணப் பட்டார். அம்மா மடிப்புக் கலையாத பட்டுப் புடவையில்.

"நீ ஏன் உக்காந்திருக்க பூங்கி. போய் புடவைக்கு அல்லது சுடிதாருக்கு மாறி வா. கிளினிக் போவோம்!"



அடுத்த அரைமணி நேரத்தில் பெற்றோர், சகோ தரனுடன், திறக்கப் போகும் புதிய கிளினிக்குக்குப் புறப்பட் டாள் பூங்கொடி.

கிரஸெண்ட் அவின்யூ.

ஏழாயிரத்து ஐந்நூறு சதுர அடியில் நான்கு மாடிக் கட்டடமாய் நிமிர்ந்திருந்தது மல்லிகை மகப்பேறு மருத்துவமனை. மருத்துவமனைக்குள் குழந்தைகள் காப்பகம் இருந்தது. மருத்துவமனை குப்பைகளை எரிக்க இன்ஸிரேட்டர் அறை கட்டப்பட்டிருந்தது. மருத்துவமனை தேவைக்குப் பால் வழங்க பிரத்தியேகமாக ஒரு பால் பண்ணையும் அமைக்கப்பட்டிருந்தது.

ஆம்புலன்ஸ்கள் இரண்டு, மார்ச்சுவரி வேன் ஒன்று, பொருட்கள் சுமந்து வர மூன்று டன் கொள்திறன் உள்ள ட்ரக்கர் ஆகியவை ஷெட்டில் காத்திருந்தன.

மருத்துவமனை முழுக்க மின்சாரப் பழங்கள் ஜோடனை.

ஏறக்குறைய இருபது பள்ளிப் பேருந்துகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கிண்டர்கார்டன் குழந்தைகள் வீந்திறங்கினர். உடன் தாய்மார்கள்.

இறங்கின குழந்தைகளுக்கு உடனடியாக சாக்லேட்டும் ஐஸ்கிரீமும் வழங்கப்பட்டன.

குழந்தைகளுக்கு ஒப்பனை செய்ய ஒப்பனைக் கலைஞர்களும் உடையலங்கார நிபுணர்களும் வந்திருந்தனர்.

மாஸ்க்- ஆடம்ஸ் பாமிலி-பிளின்ட்ஸ்டோன்-டாம் அண்ட் ஜெர்ரி கிட்ஸ்- டெக்ஸ்டர்- பவர்பப் கேர்ள்ஸ்- ஜெட்ஸன் - பேட்மேன் - கேப்டன் பிளானட் - தி லிட்டில் லூலூ - ஜானி பிரேவோ - பிங்கி அண்ட் தி ப்ரெய்ன் - ஜி.ஐ.ஜோ. - பாப்பாயீ - கவர்ட்லி டாக் - டாப் கேட் - ஸ்பீட் ரேஸர் - பெரில்ஸ் ஆஃப் பெனிலோப் பிட்ஸ்டால் கார்ட்டூன் சீரியல்களில் வரும் கதாபாத்திரங்கள் உயிர்த்தன. எங்கு பார்த்தாலும் வர்ண ரிப்பன்கள் காற்றில் சுழன்றன.

மருத்துவமனையின் வெளிவாசலில் நாதஸ்வர இசை வழிந்து கொண்டிருந்தது. வாசலின் இரு புறமும் குலை தள்ளும் இரு வாழை மரங்கள் கட்டப்பட்டிருந்தன. காற்றில் சந்தனமும் ரோஜா இதழ் தைலமும் நறுமணம் கிளப்பின.

சுகாதார மேற்பார்வையாளரிடம் ஒரு பணியாளன் ஓடி வந்தான்.

"மேடம்"

"என்ன மாடிப்படி உச்சில ஒரு குருவிக்கூடு இருக்கு. குருவி எச்சம் போட்டு மாடிப்படி கைப்பிடிச் சுவர்ல கனமா படிஞ்சு போச்சு. சுரண்டியெடுத்து கிளீன் பண்ணிட்டோம். மீண்டும் குருவி எச்சம் போட்டா என்ன பண்றது?"

"பக்கத்தில் வா! காதில் கிசுகிசுத்தாள். இதெல்லாமா கூச்சல் போட்டுச் சொல்றது? ஒரு நீளத் துரட்டி ரெடி பண்ணி குருவிக் கூட்டை அகற்றிடு!"

"குருவிக்கூட்டைக் கலைச்சா பாவமில்ல?"

"உனக்குப் புண்ணியம் வேணுமா, சம்பளம் வேணுமா?"

"சம்பளம்தான்!"

"மருத்துவமனை திறக்கப்பட இன்னும் ஐம்பது நிமிடங்கள்தான் உள்ளன. அதற்குள் காரியத்தை முடி!"

பணியாளன் முணுமுணுத்தபடி போனான்.

விடியற்காலை 4.30-6.00 பிரம்ம முகூர்த்தத்தில் கணபதி ஹோமம் நடந்து முடிந்திருந்தது. புரோகிதர் எல்லா அறைகளுக்கும் சாம்பிராணிப் புகை காட்டிவிட்டு ஆயிரத்தோரு ரூபாய் தட்சணை வாங்கிக் கொண்டு போயிருந்தார். ஹோமத் தீயில் போட்டு எடுத்திருந்த கரிய நாணயங்களை கேஷ் கவுண்டர் டப்பாவில் சேமித்து இருந்தனர்.

மருத்துவமனை முகப்பில் சிறுவர்களும் சிறுமியரும் வினோதமான ஒப்பனைகளில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

போர்டிகோவில் ஒரு மாருதி எஸ்டீம் சறுக்கி நின்றது. அதிலிருந்து பூங்கொடி குடும்பத்துடன் இறங்கினாள். பூங்கொடி சுடிதாரின் மேல் மருத்துவர் கோட் அணிந்திருந்தாள். இரண்டாவது வாகனத்திலிருந்து டிடக்டிவ் தேஜஸ்வினி இறங்கினாள். வழக்கத்துக்கு மாறாகப் பட்டுப்புடவை உடுத்தியிருந்தாள். மூன்றாவதாய் வந்த மெட்டாடர் வேனிலிருந்து செவிலியர் நங்கைகள் இறங்கினர்.



மாடிப் படிக்கட்டு.

அலுமினிய ஏணியில் ஏறிக் குருவிக் கூட்டைத் துரட்டி செருகி இழுத்தான் பணியாளன்.

அவ்வளவுதான்....

ஒட்டுமொத்தக் குருவிக் கூடும் கீழே விழுந்தது.

கூட்டிலிருந்த நான்கு குஞ்சுகள் கீச் கீச் என்று கத்தியபடி இரத்தச் சேறாகின. கூட்டிலிருந்து தனியே பறந்த தாய் குருவி பரிதவிப்பாய்ப் பறந்து மின்விசிறியில் சிக்கி சிறகு சிறகாய்ச் சிதறியது.

சுகாதாரப் பணியாளர் வாயைப் பொத்திக் கொண்டு அலறினான்.

தேஜஸ்வினி ரிப்பன் கத்தரிக்க கத்தரிக்கோலுடன் நடந்தாள்.

பூங்கொடியின் தாய்வழி உறவினர் தனி வேனில் வந்தனர். வேனின் கர்ண கடூரமான இன்ஜின் சப்தம் அனைவரின் காதுகளையும் கவர, பின்னுக்குத் திரும்பினர்.

வேன் பிரேக் பிடிக்காமல் தாறு மாறாய் ஓடியது.

நிறைமாதக் கர்ப்பமாய் இருக்கும் பசுமாடு ஒன்று ஓடுபாதையில் குறுக்கிட்டது. வேன் சாத்தான்தனமாய்ப் பசு மீது மோதியது.

பசு காற்றில் பறந்து தரையில் சொத்தேறியது. மீண்டும் வேனின் டயர்கள் பசுவின் வயிற்றின் மீது ஏறி இறங்கின. வயிறு கிழிந்து பிசு பிசுப்பான கன்று ஜவ்வு போர்வையுடன் எட்டியது.

பசுவின் மரண ஓலம் மல்லிகை மருத்துவமனைக் கட்டடம் முழுக்க எதிரொலித்தது!

(2)

பட்டுத் துணியின் வழவழப்பு
பட்டாம்பூச்சியின் நகர்வு
இரண்டும் பிசைந்த பூந்தோட்டம்
தரையில் முன்னங்கை ஊன்றி
நகருதே-குழந்தையாக!

- பா. சத்தியமோகன்

வேன், காம்பவுண்ட் சுவரின் மீது பேய்த்தனமாய் மோதியது. முன்பகுதி நசுங்கி பேனட் வெடித்துத் திறந்து கொண்டது. ஸ்டீயரிங் ஓட்டுநன் நெஞ்சின் மீது நெத்தியது. ஓட்டுநன் மூக்கிலும் வாயிலும் காதிலும் இரத்தம் பூத்தது. வேனில் இருந்தவர்கள் அலறியபடி கீழே இறங்கினர்.

பூங்கொடி முகத்தில் உலக வேதனை படர்ந்தது. கண்களில் கண்ணீர் ததும்பியது. கத்தரிக்கோலுடன் நின்றிருந்த தேஜி, பூங்கொடியின், தோளில் தட்டி ஆறுதல் வார்த்தை கூறினாள். சுகாதாரப் பணியாளர்கள் அழைத்து இறந்து போன பசு மாட்டை அப்புறப்படுத்தச் சொன்னாள். வேன் டிரைவருக்கு மருத்துவ உதவி.

பத்து நிமிடத்தில் காட்சி அமைப்பு சாந்தமானது.

ரிப்பனைக் கத்தரித்தாள் தேஜி. படபடவென அனைவரும் கைதட்டினர். மருத்துவமனையின் ஒவ்வொரு அறையையும் தேஜி மற்றும் விருந்தினர்களுக்கு சுற்றிக் காட்டினாள் பூங்கொடி. சக பெண் மருத்துவர்களை அறிமுகப்படுத்தினாள்.

அனஸ்தீஸியா பிரிவில் இரு இளைஞர்கள் இருந்தனர்.

அவர்களைச் சுட்டி பூங்கொடி, "அவங்க ரெண்டு பேருமே மயக்க மருந்தியல் நிவுணர்கள் அவர் சூரி, அவர் போத்திராஜா!"

அடுத்த ஒரு மணி நேரத்தில் மருத்துவமனையைச் சுற்றிப் பார்க்கும் படலம் முடிவுற்றது.

"ஓகே பூங்கி! நா கிளம்புறேன். பசுமாட்டை வேன் மோதிக் கொன்னதை அபசகுனம் கிபசகுனம்னு நினைச்சு மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. அது எதிர்பாராமல் நடந்த ஒரு விபத்து. லீவ் இட், உனது கேரியரைப் பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கியிருக்கிறாய். மகப்பேறு மருத்துவத்தில் எக்கசக்கமாய்ச் சாதிக்க வாழ்த்துக்கள்!"

தேஜி புறப்பட்டுப் போனாள்.

"பூங்கி! நீ பார்க்கும் முதல் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைக்கு ஐந்து பவுன் செயின் போடக் காத்திருக்கிறோம்" என்றனர் பெற்றோர்.



விழாவுக்கு வந்த குழந்தைகளுக்கு பார்பி பொம்மை வழங்கி வழியனுப்பினாள் பூங்கி.

மஞ்சள் நிற கால் டாக்ஸி வந்து நின்றது.

அதிலிருந்து ஒரு நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணை அவளது கணவனும் அவளது தாயாரும் இறக்கினர்.

கர்ப்பிணிப் பெண் வலியால் துடித்துக் கொண்டிருந்தாள்.

பிரசவம் பார்க்கும் அறைக்குக் கொண்டு செல்லப் பட்டாள். கையுறை அணிந்து கொண்டு பூங்கி அறைக்குள் உட்பட்டாள். உடன் ஆனியும் சமிதாவும்.

கணவன் வெளியே நின்று கொள்ள, அம்மா மட்டும் உள்ளே அனுமதிக்கப்பட்டாள். கர்ப்பிணிப் பெண்ணைப் பாதுகாப்பான போஸ்ச்சரில் படுக்க வைத்து ஆராய்ந்தாள் பூங்கி. பனிக்குடம் உடைந்திருந்தது.

"இந்தப் பெண் உங்க மகளா?"

"ஒரே மகள்!"

"வயது?"

"இருபத்தி ரெண்டு ஆவுது!"

"தலைப் பிரசவம் போல..."

"ஆமாம்!"

"எந்த டாக்டர்கிட்ட காண்பிச்சிட்டு இருந்தீங்க? பிரசவத்துக்கு அதே டாக்டர்கிட்டக் கொண்டு போகாம இங்க ஏன் கொண்டு வந்தீங்க?"

"வளைகாப்பு வரைக்கும் அவங்க திண்டிவனத்தில் காட்டியிருக்காங்க. வளைகாப்புக்கு வந்தபின் இங்கு எனக்குப் பரிச்சயமான கைனகாலஜிஸ்ட்டுகள் கிட்ட காட்டினேன். அவங்க சொன்னதுக்கு இருபது நாள் முன்னதாகவே வலி வந்திருச்சு. அவசரத்துக்கு இங்க கொண்டு வந்தோம்!"

"டாக்டர்கள் கிட்ட காட்ன சீட்டுகள் எல்லாம் கொண்டு வந்திருக்கீங்களா?"

இடுப்பில் மடித்துச் சொருகியதைக் கொத்தாய் எடுத்து நீட்டினாள். வாங்கி அவசரமாய் நோட்டமிட்டாள் பூங்கொடி.

இப்போது மீண்டும் நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணைச் சோதிக்க ஆரம்பித்தாள், பூங்கி. செவிலியர் நங்கைகள் இருவரும் வந்து ஜோடி சேர்ந்தனர். பிரசவத்திற்குத் தேவையான ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

தொழில் நுட்ப ரீதியாய் பூங்கியும் சகாக்களும் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டனர்.

"சிசேரியன் தேவையில்லை. சாதாரணப் பிரவசம்தான். ஆனால் குழந்தையின் தலை பெரிதாக இருக்கிறது. பிறவிப் பாதையைக் கத்திவைத்து சில அங்குலம் அகலப்படுத்த வேண்டிவரும்!."

சகாக்கள் தலையாட்டினர். கர்ப்பிணிப் பெண்ணிற்கு மருத்துவமனைச் சீருடை அணிவிக்கப்பட்டது, தேவையான அனைத்துச் சோதனைகளும் தொடந்தன.

கர்ப்பிணி துள்ள, துடிக்க ஆரம்பித்தாள். அவளது வாய் வசவுமழை பொழிய ஆரம்பித்தது.

"நான் கல்யாணம் கேட்டேனா? இப்படிக் கவித்திட்டியே மம்மி? அய்யோ...ஸ்..வலி உயிர் போகுதே! எல்லாம் எல்லாம் அவனாலதான். கேட்டானா? குழந்தை வேணாம் வேணாம்னு சொன்னேன்! கேட்டானா? இருபத்திரெண்டு வயசிலேயே வயிற்றைத் தள்ளிக் கிழவியாயிட்டேன்! புருஷன்காரன்களை எல்லாம் வரிசையா நிக்கவச்சு சுடணும். இல்ல ஆப்கனுக்கு சண்டை போட அனுப்பணும். ஸ்ஸ்ஸ்...ஆ...ஆஹ்! கத்துக்குட்டி டாக்டர் பொம்பளைங்க கிட்ட கொண்டு வந்துவிட்டுட்டியே மம்! எனக்கு பயமாயிருக்கு... பயமாயிருக்கு... பயமாயிருக்கு? என் குழந்தையே எனக்கு எமனாகப் போகுது! நா செத்துடப் போறேன்! என் புருஷன் இன்னொரு கல்யாணம் பணிக்கப் போறான்!" - அரற்றினாள்.

அம்மா அதட்டினாள் "வாய்க்கு வந்ததைப் பேசாதே உனக்கு ஒண்ணும் ஆகாது. உன்னை நல்ல ஆஸ்பத்திரிக்குத் தான் கொண்டு வந்திருக்கேன்!"

"கிழிச்ச போ. அதோ இறந்து போன நம்ம தாத்தா என்னை வந்து கூப்பிடுறாரு! (சுவரை வெறித்து) நா வரமாட்டேன். நீ கிளம்பு தாத்தா!"



"நான் ஒரு வார்த்தை விசாரிச்சதா எங்கப்பன்கிட்ட சொல்லு!"

"ஏண்டி அம்மா என்னையே நக்கல் பண்றியா?"

"நீதானே தாத்தா தெரியுறார்னு சொன்னே?-" அம்மாக்காரி மகளைப் பரிகசித்தாள். பின் மகளின் தலை மாட்டுக்குப் போய் தலைக் கேசத்தைக் கோதிக் கொடுத்தாள். "எல்லாத் தலைப்பிரசவக்காரிகளும் பேசுறதைத்தான் பேசுற. உனக்கு ஒண்ணும் ஆகாது. குழந்தை ராஜா அல்லது ராணி மாதிரி பிறக்கப் போகுது. குழந்தையை மெய்மறந்து கொஞ்சப் போற. குழந்தையோட அழகில் உலகத்தையே மறக்கப் போற!"

பிரசவ வலி மிகைத்துத் தாறுமாறாய் அலற ஆரம்பித்தாள் கர்ப்பிணிப் பெண். உபயோகித்து எறியும் கையுறைக் கையால் தெரியும் குழந்தை தலையை அளந்து பார்த்தாள் பூங்கொடி.

லோக்கல் அனஸ்தீஸியா ஸ்ப்ரே செய்தாள். கிருமி நீக்கம் செய்யப்பட்ட கத்தியால் கீறினாள் செவிலியர். இரத்தப் பெருக்கை காட்டன் வைத்து ஒத்தினர்.

நாற்பது நிமிடப் போராட்டத்துக்குப்பின் குழந்தையை வெளியே உருவினாள் பூங்கி. குழந்தை ஸ்லோமோஷனில் வெளியே வந்தது. குழந்தையின் உடல் முழுக்க ரத்தமும் கழிவுகளும் ஈஷியிருந்தன.

குழந்தையைத் தலைகீழாக்கினாள். தொப்புள் கொடியை வெட்டி இறுக்கினாள். குழந்தை "ங்கா...ங்கா..ங்கா" என்றது சங்கீதக் குரலில். பிரபஞ்சத்தின் முதன்மையான சங்கீதம் பிறக்கும் குழந்தையின் சிணுங்கல்தானே! சிரித்தாள் பூங்கி. குழந்தையைத் தாயிடம் காட்டிவிட்டு அதே நொடியில் அதனை செவிலியர் நங்கையிடம் சுத்தம் செய்யத் தந்தாள். அகலப்படுத்திய பாதையைக் குறுக்கித் தையலிட்டாள். சீக்கிரம் காயம் ஆறக் குறிப்பிட்ட மருந்து ஸ்ப்ரே செய்தாள்.

செவிலியர் நங்கைகள் குழந்தையைச் சுத்தம் செய்தனர். எடையிட்டனர். குழந்தை 3.1 கிலோ எடை இருந்தது. குழந்தை பற்றிய குறிப்புகளை அதற்குரிய சீட்டில் குறித்தனர். குழந்தையை டவல் சுற்றித் தொட்டிலில் இட்டனர்.

செவிலியர் நங்கை வெளியே எட்டினாள். கணவன் நின்றிருந்தான். "அழகான ஆண் குழந்தை! தாயும் சேயும் நலம்!"

கணவன் வானத்திற்குக் கை உயர்த்திக் குதூகலித்தான்.

அம்மாக்காரி குழந்தையைத் தூக்கி மகளிடம் நெருக்கமாக நீட்டினாள். குழந்தையைப் பெற்ற பெண்ணின் முகத்தில் நிலா வழிந்தது. நெஞ்சில் பொங்கிய ஒரு டன் தாய்ப் பாசம் தாய்ப்பால் சுரக்குமிடத்துக்குப் பாய்ந்தது. ஆனந்தக் கண்ணீர் கசிந்தாள். வலி மறந்து போனது. ஒரு மாதிரி அசடு வழியச் சிரித்தாள்.

அருகில் போனாள் பூங்கி.

"உங்கள் குழந்தைதான் இம்மருத்துவமனையில் பிறக்கும் முதல் குழந்தை. இன்று மாலை இக்குழந்தைக்கு மருத்துவமனை சார்பாக ஐந்து பவுன் தங்கச் சங்கிலி, ஒரு மோதிரம், கால் கொலுசு ஒரு செட், கிப்ட் பேக் ஒன்றும் பரிசளிக்கப்படும். வாழ்த்துக்கள்!."

வாஷ்பேசினுக்கு நடந்தாள் பூங்கி, கையுறைகளை உரித்துக் குப்பைக் கூடையில் வீசினாள். மாஸ்க் அகற்றினாள். கைகளைச் சுத்தம் செய்து கொண்டாள். பிற கேஸ்களைப் பார்க்கக் கிளம்பினாள்.

பெயின் கில்லர் கொடுக்கப்பட்டு மயக்க நிலை பாய்ந்திருந்தாள், பிரசவத்திற்கு வந்திருந்த பெண். வீட்டுக்குச் சில பொருட்கள் எடுத்துவரப் போயிருந்தாள் அம்மாக்காரி.

அந்த அறைக்குள் ஒரு கறுப்பு உருவம் நடமாடியது. கூடுதல் மயக்கம் தரப் படுத்திருந்த பெண்ணின் நாசியில் எதையோ ஸ்ப்ரே செய்தது. கண்களில் கொலை வெறியும் கையில் பளபளக்கும் கத்தியும் வைத்திருந்தது அது. கத்தியுடன் அந்த உருவம் குழந்தைக்குக் குனிந்தது. குனிந்து நிமிர்ந்த அதன் முகத்தில் இரத்தம்... இரத்தம். வந்த வேலை முடிந்து மாயமாய் மறைந்தது.

மாலை மணி ஐந்து

பூங்கி பெற்றோருடன் அந்தக் குளிர்ப்பதன மூட்டப் பட்ட அறைக்குள் பிரவேசித்தாள். உடன் பிரசவம் பார்க்கப்பட்ட பெண்ணின் கணவன், பெற்றோர், கணவன் வழி உறவினர்கள்.



உள்ளே போன எல்லோரும் ஒரு சேர வானம் கிழிய வீறிட்டனர். காலையில்தான் பிறந்திருந்த அந்தப் பச்சைக் குழந்தை கழுத்துத் துண்டிக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தது!

## 3

குழந்தை
ஒரு மெல்லிய கனவு
உடம்பு படைத்த தாலாட்டு
குணக் கலப்பில்லாத
உலக மலர்களின்
மெலானின் கையெழுத்து

-பா. சத்தியமோகன்

குழந்தை இறந்து கிடக்கும் காட்சி - அனைவர் முகத்தையும் அசுரமாய்த் தாக்கியது. பூங்கொடி நிலைகுலைந்தாள். பிரசவம் பார்க்கப்பட்ட பெண்ணின் கணவன், பெண்ணின் பெற்றோர் பெரும் குரலெடுத்துக் கதறினர்.

நொடியில் ஒட்டு மொத்த மருத்துவமனையும் அல்லோலகல்லோலப்பட்டது.

தகவல் காவல் துறைக்குப் பறந்தது.

போர்டிகோவில் காவல்துறை வாகனங்கள் சறுக்கிவந்து நின்றன. அதிலிருந்து தேவாவும் தேஜிஸ்வினியும் இறங்கினர்.

தேஜி முகத்தில் வேதனை படர்ந்திருந்தது. காலையில் தான் சில அபசகுனங்கள் அரங்கேறின. பூங்கிக்குச் சமாதானம் கூறினோம். ஆனால் மாலையில் நிஜமான பயங்கரம் நடந்தேறி விட்டதே!

நடப்பதை வேடிக்கை பார்க்கப் பெரும் கூட்டம் கூடியிருந்தது. செய்தி சேகரிக்க மீடியா மக்கள் குழுமியிருந்தனர்.

குளிப்பதனம் ஊட்டப்பட்ட அந்த அறைக்குள் தேவாவும் தேஜியும் பிரவேசித்தனர். ஸெடேஷனில் இருந்த அந்த இளம் தாய் மெதுவாக, மிக மெதுவாகக் கண் திறந்தாள். அவளது உதடுகள் லேசாக முணுமுணுத்தன. "என் குழந்தை... என் குழந்தை.... என் குழந்தை!"

அவுட் ஆஃப் போக்ஸலில் அழும் கூட்டம் தெரியவே தலையை உலுக்கிக் கொண்டாள் அந்த இளம் தாய். சிரமப்பட்டுத் தலையைத் தூக்கினாள்.

இரத்த வெள்ளத்தில் கிடக்கும் குழந்தையைக் காவல்துறைப் புகைப்பட நிபுணர் புகைப்படங்களாய்ச் சுட்டுக் கொண்டிருந்தனர்.

எங்கிருந்துதான் அந்த ஆவேசம் பீறிட்டதோ!

சரேலென எழுந்து கால்கள் தடுமாறி நிலை குலைந்து இரத்தத் தேக்கத்தில் முழுங்காலிட்டுப் பெரும் குரலில் ஓலமிட்டாள். காற்று மண்டலம் கிழிந்தது.

"குழந்தே! என் குழந்தே! போச்சே! எல்லாம் போச்சே! இப்படி பறிகொடுக்கிறதுக்காகவா பத்து மாசம் சுமந்தேன்? பிறந்த பச்சைக் குழந்தைக்குக் கூடவா எதிரிகள் இருப்பாங்க? நானும் என் புள்ளையும் யாருக்கும் எந்த தீங்கும் பண்ணலையே! வரும்போதே நெனைச்சேன் இந்தக் கத்துக்குட்டி ஆஸ்பத்திரிலயா எனக்குப் பிரசவம்னு, நெனச்ச மாதிரியே நடந்து போச்சே!"

நான்கைந்து செவிலியர் நங்கைகள் ஓடிவந்து அந்த இளம் தாயை இரு கைப் பக்கமும் கோர்த்துப் பிடித்துத் தூக்கினர். அவள் முரண்டினாள். மல்லாடினர்.

பூங்கொடி பக்கம் அந்தத் தாய் திரும்பினாள்.

"அடி கொலைகாரி! இப்ப திருப்திதானா? எனக்குப் பிரசவம் பார்க்கிற மாதிரிப் பார்த்து என் குழந்தையை முழுங்கிட்டியேடி, பாவி... சண்டாளி... இரத்தக் காட்டேரி!" திரும்பி, "போலீஸ் இவளை விடாதீங்க, இவளைக் கைது பண்ணுங்க அவளுக்குத் தூக்குத் தண்டனை விதிங்க"

மீண்டும் மயக்க மருந்து செலுத்தப்பட்டு அந்த இளம் தாய் பக்கத்து அறைக்குக் கொண்டு செல்லப்பட்டாள். தடயவியல் நிபுணர் ஆதாரச் சேகரிப்பில் இறங்கியிருந்தார். தேஜஸ்வினி உபயோகித்து எறியும் கையுறையை அணிந்து கொண்டாள். மெதுவாகக் கண்ணாடி ஜன்னலுக்கு நடந்தாள். ஜன்னலைத் திறந்தாள். எட்டினாள்.

"அப்படியே உன்னைத் தலைகீழாகக் கீழே தள்ளிவிடவா?" ஒரு கரகரப்பான குரல் தேஜியின் காதுகளுக்குள் இரகசியமாய் வினவியது. தேஜியின் உடம்பு ஓர் உதறு உதறிக் கொண்டது. மயிர்க்கால்கள் நடனமிட்டன



பின்னுக்கும் - பக்கவாட்டிலும் - ஆழத்து ஸன் ஸேடுகளிலும் யாராவது நிற்கிறார்களா என ஆராய்ந்தாள் தேஜி. யாருமேயில்லை. பிரமையோ?

தேவா அருகில் வந்து தேஜியின் கைகளைத் தொட்டார். "என்னுடன் வெளியே வா!" தரைத்தளம் போயினர். கட்டடத்துக்கும் காம்பவுண்ட் சுவருக்கும் இடையே நடந்தனர்.

டார்ச் உயர்த்தி அண்ணாந்தார் தேவா. வெளிச்ச வட்டம் குழந்தை கொலை செய்யப்பட்ட அறையை முத்தமிட்டது. டார்ச் ஜன்னலிலிருந்து சகல சுவர் திசைகளுக்கும் தாவியது.

அந்தி அரையிருட்டில் விதிர்த்துப் போனாள் தேஜி. சுவர் முழுக்கக் காலடித் தடங்கள்! யாரோ ஒரு நாற்பதடி உயரமுள்ள மனிதன் புவி ஈர்ப்பு விசையைப் பற்றிக் கவலைப்படாமல் சுவரில் படுக்கை வசத்தில் சடுகுடு ஆடியது போல் காலடித் தடங்கள்!

தரையில் எவ்விதக் காலடித் தடங்களும் காணோம்!

அவசர அவசரமாய் அங்கு ராட்சத விளக்குகள் உயிர்ப்பிக்கப்பட்டன. தரை முழுக்க இன்ச் பை இன்ச் ஆராயப்பட்டது.

தரையில் முழங்காலிட்டுக் கண்களை நுண்ணித்தாள் தேஜி.

ஏதோ கிடந்தது.

எடுத்தாள். அது ஒரு கோழிக் குஞ்சின் பிஞ்சுக் கால்.

மெதுவாக எழுந்தாள்.

பெரும் இரைச்சலுடன் ஒரு விபரீத மழை பொழிந்தது. தேவா மீதும் தேஜி மீதும் ஆயிரக்கணக்கான கோழிக் குஞ்சுக் கால்கள் பட்டுத் தெறித்தன. அனைத்துக் கால்களும் ஒரே நீளமாய் இரத்தம் துளிர்த்துக் காட்சியளித்தன.

எங்கிருந்து வீசப்பட்டிருக்கும்? குழி முயலாய் ஓடினாள் தேஜி. ஏறக்குறைய முப்பது நிமிஷம் பார்வைச் சல்லடை வீசிச் சலித்தாள். எங்கிருந்தும் வீசப்பட்டதாய்த் தெரியவில்லை. மெய்யாலுமே அது மழையாய்ப் பொழிந்ததாகவே தோன்றியது தேஜிக்கு. கோழிக்கால்கள் சோதனைக்குச் சேகரிக்கப்பட்டன.

"தேவா!"

"என்ன தேஜி?"

"கேஸில் அமானுஷ்யம் ததும்புகிறதே!"

"வெயிட், வெயிட். டோண்ட் ஜம்ப் இன் டு எனி கன்க்ளுஷன்ஸ்...."

தலையாட்டினாள் தேஜி. காவல் துறை துணை அதிகாரி களைத் தேவா அழைத்தார். "இக்கட்டடத்தைச் சுற்றியுள்ள அனைத்துக் கட்டடங்களையும் நோட்டமிடுங்கள். பிளாட்டுகளில் குடியிருப்போர் - அனைவரைப் பற்றிய தகவல்களையும் சேகரியுங்கள். பக்கத்தில் ஏதாவது பிராய்லர் கோழிப் பண்ணை இருக்கிறதா என்றும் பாருங்கள்!" சிரித்தார்.

தேஜியும் சிரமப்பட்டுச் சிரித்தாள்.

"இன்னும் ஒரு வாரத்துக்கு சிக்கன் சாப்பிட யோசிப்ப - இல்லையா, தேஜி?"

தேஜி பதில் கூறவில்லை. மீண்டும் நான்காவது தளத்துக்குப் போயினர். குழந்தையின் சடலம் போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பப்பட்டது.

"தேஜி மெதுவாகப் பூங்கொடியிடம் நடந்தாள். "பூங்கி உன்னுடன் நான் தனியாகப் பேச வேண்டும்."

தனியே ஒதுங்கினர்.

"என்ன பூங்கி, இதெல்லாம் ? உனக்கோ உன் குடும்பத்துக்கோ வேண்டாத எதிரிகள் யாராவது இருக்காங்களா?"

பூங்கி அழுதாள். "தெரியலையே... அப்படி யாரும் இருப்பதாகத் தெரியலையே... ஏதோ ஒரு துரதிருஷ்டம் என்னைத் தொடருகிறது! வேறென்ன சொல்ல?"

"நன்கு யோசிச்சுப் பார்!"

"எனக்குத் தெரிஞ்சு யாரும் இல்லை. ஒருவேளை நீங்க என் பெற்றோரை விசாரிச்சா தெரியுமோ என்னவோ? தெரிஞ்சு என்ன பண்ண? என் ஒட்டுமொத்த கேரியரே கருச்சிதைவாகி நிக்கிறதுகூட எனக்குப் பெருசாத் தெரியல... நான் பார்த்த மொதப் பிரசவமே கழுத்து அறுபட்டு இரத்த வெள்ளத்தில்... (அழுகை) இறந்து போன அந்தப் பச்சைக்



குழந்தையை உயிரோடு கொண்டு வர முடியுமா இனிமேல்?" முகத்தில் அடித்துக் கொண்டு அழுதாள் பூங்கொடி....

"காம் டவுன் பூங்கி காம் டவுன்!" தோளில் தட்டிக் கொடுத்தாள் தேஜி.

"நீ அந்தப் பெண்ணுக்குப் பிரசவம் பார்த்துவிட்டு எங்கு போனாய்?"

"மற்ற கேஸ்களை அட்டென்ட் பண்ணப் போனேன்!"

"மொத்தம் எத்தனை பிரசவங்கள் இன்று பார்த்தாய்?"

"அந்தப் பெண்ணுக்குப் பிறகு ஆறு!"

"அனைத்தும் சுகப்பிரசவங்களா?"

"இல்லை. ஒன்று சிசேரியன் தேஜி!"

"ஆறு பிரசவங்களின் தாய்களும் சேய்களும் சேமமா?"

"சேமம்தான் தேஜி!"

"முதலில் பிரசவம் பார்க்கப்பட்ட பெண்ணின் அறைக்கு இடையில் வந்தாயா?"

"வரவில்லை, தேஜி! ஏன் கேட்கிறீர்கள்?"

"சாதாரணமாகத்தான் கேட்டேன். இடைப்பட்ட நேரத்தில் யாராவது அந்தப் பெண்ணின் அறைக்குள் போவதைப் பார்த்தாயா?"

"இல்லை. ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை டியூட்டி நர்ஸ்தான் அறைக்குள் போய் வந்திருக்கிறார். கடைசியாக அந்த நர்ஸ் மாலை 4.30 மணிக்குப் போய் வரும்போது கூட குழந்தை நன்றாகவே இருந்திருக்கிறது!"

குறிப்பிட்ட செவிலியர் நங்கை அழைக்கப்பட்டாள்.

"உனது பெயர்?"

"சூசன்!"

"இதற்கு முன் நீ எங்கு பணி புரிந்தாய்?"

"ஜுலைகா மருத்துவமனையில்!"

"நீ என்ன படித்துள்ளாய்?"

"பி.எஸ்.ஸி., நர்சிங்!"

"படித்தது எங்கே?"

"அண்ணாமலை யுனிவர்சிட்டியில்!"

"நீ கடைசி முறையாகக் குழந்தையைச் சோதித்து வரும் போது அறைக்குள்ளே யாராவது ஒளிந்திருக்க வாய்ப்புண்டா?"

"இல்லவே இல்லை!"

"குழந்தையின் தாய்க்கு என்ன செடேட்டிங் கொடுத்திருந்தாய்?"

"தாயின் இரத்தம் சாம்பிளுக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. வேறு புதியதாய் ஏதாவது செடேட்டிங் கொடுக்கப்பட்டுள் ளதா என்பது இரத்தப் பரிசோதனையில் தெரிந்து போகும்!"

"உண்மைதான் மேடம்!"

"அந்தக் குழந்தை பற்றிய மருத்துவக் குறிப்புகள் - நீ எழுதியதுதானே?"

"ஆம்!"

மருத்துவக் குறிப்பு அட்டையை வாங்கிப் பத்திரப் படுத்திக் கொண்டாள் தேஜி. பூங்கியின் பெற்றோரை விசாரித்தாள். யாரும் எதிரி இருப்பதாக அவர்கள் சொல்லவில்லை. குலுங்கிக் குலுங்கி அழுதனர். அவர்களைச் சமாதானப் படுத்தினாள் தேஜி. மேன்மேலும் பலரை விசாரித்துத் தளர்வுற்றாள் தேஜி. எந்த உபயோக கரமான தகவலும் பெயரவில்லை. கீழ் உதட்டை அலுப்பாய்க் கடித்துக் கொண்டாள் தேஜி.

காவல் துறை சம்பிரதாயங்கள் முடிய நள்ளிரவானது.

தேஜியும் தேவாவும் காருக்கு நடந்தனர்.

வெளிவாசல் இரும்புக்கிராதி கேட்டில் ஒரு குட்டிப் பூனை நரம்புச் சுருக்கில் தொங்கிக் கொண்டிருந்தது. கழுத்தை நரம்பு இறுக்க இறுக்க 'மியாவ்!மியாவ்!' என ஈனஸ்வரமாய் மிழற்றியபடி பின்னங்கால்களை உதறிக் கொண்டது. காரிலிருந்து இறங்கி ஓடினாள் தேஜி.

அதற்குள் கடைசி முறையாகக் கால்களை உதறி விறைத்தது பூனை.

திறந்திருந்த வாயில் குட்டி நாக்குத் தொங்கியது!

வாயிலிருந்து சிறுசிறு துளியாய் இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது.

விழிகள் பயமுறுத்தும் விதமாய்ப் பிதுங்கியிருந்தன.

இனி நொடிக்கு நொடி திகில்தான்.

## 4

குளிர்ப் பதனமூட்டப்பட்ட போஸ்ட் மார்ட்டம் அ உபயோகித்து எறியும் கையுறை அணிந்து கொண்டா



மருத்துவர். முகத்தில் பச்சை நிற மாஸ்க். அவருக்கு உதவிசெய்ய இரு மருத்துவ உதவியாளர்கள் நின்றிருந்தனர்.

தேஜியும் கையுறை மாஸ்க் அணிந்திருந்தாள்.

மேசையில் குழந்தையின் பிரேதம் கிடத்தப்பட்டிருந்தது. உடல் தனியாக, தலை தனியாக.

மருத்துவர் முதலில் பிரேதத்தின் வெளிப்புறத்தை ஆராய்ந்து குறிப்புகள் சொல்லச் சொல்லக் குறித்துக் கொள்ள ஆரம்பித்தாள் தேஜி. கண்களை, நாசியை, காதுகளை, வாயை நுணுக்கமாய் ஆராய்ந்தார். குழந்தையின் வாய்ப் பகுதிக்குள் ஒரு காட்டன் சுற்றிய ஸ்வாப்பைத் திணித்து உள்ளிருக்கும் திரவம் சுற்றி இழுத்தார் நுண்ணோக்கி ஆய்வுக்கு. இரு உதடுகளுக்கு இடையே நாக்குத் துருத்தல் தெரிந்தது. ஒரு விரல் வைத்துக் குழந்தையின் மேற்புறத்தை அமுக்கி பார்த்தார். மேற்தோல் நிறமாற்றத்தைக் கணித்தார். குழந்தையின் உறைந்த இரத்தம் முழுப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. குழந்தை உடலிலிருந்து மச்சங்களைக் கணக்கெடுத்தார். குழந்தையின் தற்சமய எடை பார்க்கப்பட்டது.

ஏறக்குறைய மூன்று மணி நேர அலசலுக்குப் பின் மருத்துவரும் தேஜியும் கையுறைகளை உரித்துப் போட்டுவிட்டுத் திரவ லைப்பாய் சோப்பால் கை கழுவினர்.

மருத்துவரின் தனியறைக்கு நடந்தனர். எதிர் எதிரே அமர்ந்தனர்.

"மிஸ் தேஜி! பி.எம். நடக்கும்போதே கவனிச்சேன். உன் சந்தேகம் வேற எதுவையோ நோக்கி இருக்கே! வாட் டு யூ ஸ்மெல்?"

சிரித்தாள் தேஜி, "அதை அப்புறம் சொல்கிறேன்!" உதடு குவித்தாள். "மொதல்ல உங்க போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் என்ன சொல்லுதுன்னு பார்ப்பமா?"

தலையாட்டினார்.

"குழந்தையின் எடை இரண்டு கிலோ எட்டு நூறு கிராம். பிரசவக் குறிப்பு சொல்வது போல 3.1 கிலோ அல்ல. பிரசவக் குறிப்பில் குழந்தையின் கீழ்ப் பின் முதுகில் பெரிய மச்சம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. போஸ்ட் மார்ட்டம் செய்யப்படும்போது மச்சம் இல்லை. மேற்தோல்

Discolouration ஆனதால் மச்சம் மறைந்திருக்கலாம். குழந்தை இறந்த நேரம் மாலை 4.30 அல்ல; மாலை 3.00 லிருந்து மாலை 3.30 மணிக்குள், குழந்தை கழுத்து வெட்டப்படுவதற்கு முன் இறந்திருக்கிறது. குழந்தையைக் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டுக் கழுத்தைத் துண்டித்திருக்கக்கூடும்! இப்போது உன் சந்தேகத்தைக் கூறலாம் தேஜி!"

"உங்க ரிப்போர்ட்டிலேயே என் சந்தேகத்துக்கான விடை ஒளிந்திருக்கிறது டாக்டர்! மல்லிகை மருத்துவ மனையில் பார்த்த முதல் பிரசவத்தில் பிறந்த குழந்தையல்ல இது!"

"என்ன சொல்கிறாய் நீ?"

"நடந்ததை யூகிச்சுக் சொல்றேன்.... கேக்றீங்களா டாக்டர்?"

"சொல்!"

"பூங்கொடி குடும்பத்தின் மீது குரோதம் கொண்ட மிஸ்டர் எக்ஸ் வேறெதோ மருத்துவ மனையில் இயற்கைக் காரணங்களால் இறந்த குழந்தையை மாலை 3.00 மணிக்குப் பெறுகிறான். மல்லிகை மருத்துவ மனைக்குள் மாலை நான்கு மணிக்குப் பிரவேசிக்கின்றான். 4.30 மணிக்கு நர்ஸ் வந்து போன பின் இறந்த குழந்தையைத் தலை துண்டித்து இரத்தம் தெளித்துப் போட்டுவிட்டு ஒரிஜினல் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய்விடுகிறான். கோழிக் கால்களை விசிறியது, பூனையைத் தூக்கில் தொங்கப் போட்டது மிஸ்டர் எக்ஸின் உதவியாளர்களின் திருவிளையாடல்களாக இருக்கலாம். மொத்தத்தில் இருபது முப்பது நடிகர்கள் நடித்த சதி நாடகம் அரங்கேறியுள்ளது டாக்டர்!"

உதடு பிதுக்கினார் மருத்துவர், இரத்தப் பரிசோதனை ரிப்போர்ட் வந்தது. வாங்கி வாசித்தபடி தேஜியை அடிக்கடி பார்த்தார்.

"நீ சொன்ன தியரிக்கு வலு சேர்க்குது ப்ளட் டெஸ்ட் ரிப்போர்ட்ஸ் தேஜி. இறந்த குழந்தையின் ப்ளட் குரூப் வேறு. குழந்தையைப் பறிகொடுத்த பெற்றோரின் ப்ளட் குரூப் வேறு.



இறந்த டூப்ளிகேட் குழந்தையின் முண்டத்தின் அருகே தேங்கியிருந்த இரத்தம் வேறொரு ப்ளட் குரூப். சந்தேகமில்லை. ஒரிஜனல் குழந்தை உயிரோடுதான் இருக்கு டிஎன்.ஏ. டெஸ்ட் பண்ணினால் மிகத் துல்லியமாக இறந்த குழந்தை மல்லிகை மருத்துவமனையில் பிறந்ததல்ல எனக் கூறிவிடலாம்."

"டூப்ளிகேட் குழந்தை கழுத்தைச் சுற்றித் தொப்புள் கொடி இறுக்கப் பட்டு இறந்திருக்கக் கூடும். குழந்தை நிறைய கர்ப்பப்பை திரவம் விழுங்கியிருக்கிறது. இறந்த குழந்தையை சிஸேரியனில் எடுத்திருக்கிறார்கள். குழந்தை உடலில் கீறல்கள் சில உள்ளன!."

"மிஸ்டர் எக்ஸுக்குக் கொலை செய்வது நோக்கமல்ல. மல்லிகை மருத்துவ மனைக்கு அவப்பெயர் ஏற்படுவத்துவது தான் நோக்கம் டாக்டர்."

"அஃப்கோர்ஸ் தேஜி"

"போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டைக் காவல்துறைக்கு அனுப்புவதை இருபத்து நாலு மணி நேரம் தாமதப் படுத்துங்கள்!" எனக் கூறியபடி கிளம்பினாள் தேஜி. காருக்கு நடந்தாள். கார் கதவைத் திறந்தாள். ஓர் அணில் பிள்ளை கழுத்து மூக்கால்வாசி வெட்டப்பட்டு ஸ்டீயரிங்கில் தொங்கியது கழுத்திலிருந்து இரத்தம் ட்ரிப், ட்ரிப் என்று சொட்டிக் கொண்டிருந்தது.

காருக்குள் குனிந்திருந்தவள் தலையை வெளியே இழுத்து நாலாப்புறமும் பார்வையை ஓட்டினாள். யாரும் தட்டுப்படவில்லை. சிரித்துக் கொண்டாள். காருக்குத் திரும்பி அணில் பிள்ளையை எடுத்தாள். ஒரு மரத்தடியில் கையாலேயே சிறுகுழி தோண்டி அதனைப் போட்டுப் புதைத்தாள் தேஜி. டாஷ் போர்டிலிருந்து துணி எடுத்து இரத்தத்தைத் துடைத்து வீசினாள். மீண்டும் ஒரு முறை சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, காரில் அமர்ந்து காரைக் கிளப்பினாள்.

வரவேற்பறையில் மருதநாயகமும் தெய்வநாயகியும் தொய்வாய் அமர்ந்திருந்தனர்.

தேஜியைப் பார்த்ததும் சற்றே நிமிர்ந்தனர். "வாங்க தேஜி!"

"பூங்கி எங்கே?"

"அவ ரூம்ல படுத்து அழுதுகிட்டுருப்பா!"

"பூங்கி சிரிக்க வாய்ப்பு வந்திருக்கு. நான் கேக்கிற ரெண்டே கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள். மல்லிகை மருத்துவமனைக் கட்டுவதற்கான இடத்தை யாரிடம், யார் மூலம் வாங்கினீர்கள்? மருத்துவமனைக் கட்டடத்தை எந்த கன்ஸ்ட்ரக்ஷன் மூலம் கட்டினீர்கள்?"

மருதநாயகம் யோசித்தார்.

"இடம் பழம்பெரும் நடிகர் மாயகிருஷ்ணனுக்குரியது. இடத்தை மீடியேட்டர் முஸ்தபா மூலம் வாங்கினோம். மருத்துவமனைக் கட்டடத்தை மிருதுளா கன்ஸ்ட்ரக்ஷன் தான் கட்டிச்சு! ஏன் இதெல்லாம் கேக்கறீங்க் தேஜி?"

"காரணமாகத்தான். முஸ்தபாவோட செல் நம்பர் இருந்தா கொடுங்கள்!"

கொடுத்தார். தனி இடம் போய்த் தனது செல் போனை உயிர்ப்பித்தாள் தேஜி.

"வணக்கம், முஸ்தபா பாய். நான் டிடெக்டிவ் தேஜிஸ்வினி பேசுகிறேன். எனக்கு ஒரு சிறு தகவல் வேண்டும்!"

"கேளுங்கம்மா... சொல்றேன்!"

"மருதநாயகத்துக்கு மாயகிருஷ்ணனிடமிருந்து இடம் வாங்கிக் கொடுத்தீர்களல்லவா? அந்த இடத்தை வேறு யாராவது அதிக விலைக்குக் கேட்டார்களா?"

"கேட்டார்கள். மௌரியா ரியல் எஸ்டேட் அதிபர் நார்பர்ட் கேட்டார். நாங்கள் டோக்கன் அட்வான்ஸ் கொடுத்து இடத்தைப் பேசி முடித்த பின் வந்தார். மருதநாயகத்தை வெட்டிவிட்டால் கூடுதல் இருபது இலட்சம் கமிஷன் தருகிறேன் என்று ஆசை காட்டினார். ஆடம்பர அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டினால் அவருக்குக் குறைந்த பட்சம் ஐந்து கோடி இலாபம் கிடைக்கும் என்றார். போட்டது வாய் வழி ஒப்பந்தமாய் இருந்தாலும், அதனை மீற நான் மறுத்துவிட்டேன். மருதநாயகத்தையும் ஆள் வைத்து மிரட்டிப் பார்த்தார். மருதநாயகமும் அசைந்து கொடுக்கவில்லை!"

"நார்பர்ட் தன்னை மிரட்டியதை மருதநாயகம் என்னிடம் கூறவேயில்லையே! சரி, நார்பட்டுக்கு பரம்பரை பரம்பரையா ரியல் எஸ்டேட் பிசினஸ்தானா?"



"ம்ஹூம். நார்பர்ட் மேஜிக் நிபுணராய் இருந்தவர். சைதாப்பேட்டையில் அவரின் மேஜிக்கைப் பார்க்காத அம்பது வயதுக் கிழங்கள் இருக்கவே முடியாது!"

"மிருதுளா கன்ஸ்ட்ரக்ஷன் அவரது பினாமி கம்பெனியா?"

"ஆங்... அதெப்படி உங்களுக்குத் தெரியும்?"

பதில் சொல்லாமல் சிரித்தாள் தேஜி. "தகவலுக்கு நன்றி முஸ்தபா பாய். தேவைப்பட்டால் மீண்டும் தொடர்பு கொள்கிறேன்!"

செல்போனை கோமா நிலை ஆழ்த்தினாள் தேஜி. அறைகதவை மும்முறை டொக்கிவிட்டுப் பூங்கியின் அறைக்குள் போனாள் தேஜி. அழுதழுது பூங்கியின் முகம் வீங்கியிருந்தது. தேஜி வந்ததும் எழுந்தோடி, தேஜியைக் கட்டிக் கொண்டு அழுதாள் பூங்கி. "நான் கொலைகாரி தேஜி! இனி என் கேரியர் தலை தூக்கவே தூக்காது! மருத்துவர் பட்டத்தை எரியும் தீயில் தூக்கி வீச வேண்டியதுதான்!"

"அதற்கு அவசியமில்லை பூங்கி. சற்றுப்பொறு. உனக்கொரு இனிப்பான செய்தியை அதிகாரபூர்வமாய்ச் சொல்கிறேன்!"

காருக்கு வந்த தேஜி செல் போனில் ஸிஜாவைப் பிடித்தாள். "ஸிஜா!"

"சொல் தேஜி! எவனை அடிக்கணும்?"

"அவசரப்படாதே. உனக்கு அடிக்கும் வாய்ப்பு உண்டு. மிருதுளா கன்ஸ்ட்ரக்ஷன்தான் மல்லிகை மருத்துவ மனையைக் கட்டித் தந்துள்ளது. நீ என்ன பண்ணுகிறாய்? அதன் ஸைட் இன்ஜினீயர் யாரென்பதைக் கண்டுபிடித்து செல்போன் கால்கேர்ள் ஒப்பனையில் அவனை வரவழைத்து" தொடர்ந்து திட்டத்தை விவரித்தாள் தேஜி.

ஸிஜா ஒற்றை ரோஜாவுடன் பெசன்ட்நகர் கடற்கரையில் ஆளரவமில்லாத இடத்தில் தனது காரை நிறுத்தி நின்றிருந்தாள். ஸைட் என்ஜினீயர் பக்கத்தில் காரை நிறுத்தி இறங்கினான்.

"நீதானே செல்போனில் என்னை அழைத்தது?"

"ஆமா!"

"உனக்கு எப்படி என் செல்போன் நம்பர் தெரியும்?"

"உங்க நண்பர் கொடுத்தார்!"

"அவர் பெயர்?"

"அதுவா இப்போது முக்கியம்? காருக்குள் வாங்க... நிறையப் பேசலாம்!" பின் சீட்டில் அமர்ந்தாள். இவனும் போய் பக்கத்தில் அமர்ந்தான்.

"கண்களை மூடிக் கொள்ளுங்கள். ஓர் அற்புதம் காட்டுகிறேன்!"

மூடினவனின் மூக்கை எதுவோ சுரண்டியது. விழித்தான். ஸிஜாவின் துப்பாக்கிதான் அவனது மூக்கைச் சுரண்டியது.

"ஏன்டா.... இப்படி சபலப்பிறவிகளாயிருக்கீங்க? என் துப்பாக்கி உன் மூளையைச் சிதறடிக்கிறதுக்குள்ள - நீயும் உன் முதலாளியும் சேர்ந்து மல்லிகை மருத்துவமனைக்கு எதிரா என்னென்ன சதித்திட்டம் தீட்டினீங்கன்றதை மின்னல் வேகத்தில கக்கிருடா!'' சேப்டி கேட்ச்சை விடுவித்து ட்ரிக்கரில் விரல் பதித்துத் துப்பாக்கியை நடுநெற்றியில் பொருத்தினாள்.

"மருத்துவமனை பிரசவ அறை வெளிச் சுவரில் ராட்சதக் காலடிகள் 144" ஜ் 60" அளவில் வரைந்தோம். அதன் மேல் வெளிப்பூச்சு நிற ஸ்டிக்கரை மேட்ச்சிங்காக ஒட்டினோம். சம்பவத்தன்று ஒரு ஆள் ஒயிட் வாஷ் பண்ண அமைத்திருந்த சாளரத்தின் மேலேறி ஸ்டிக்கர்களை உரித்து இறங்கினான். டிடெக்டிவ் தேஜிஸ்வினி நின்ற ஜன்னலின் கீழே ஒரு மைக்ரோ ரிக்கார்டர் ஒளிச்சு வைச்சு ரிமோட்டர்ல் அதனை "ஆன்" பண்ணினோம். ஆவி காதில் பேசிய இம்பேக்ட் கிடைத்தது. கோழிக் கால்களை 100 கிலோ வாங்கிப் பக்கத்து அப்பார்ட்மென்ட்டில் ஒளிந்து கொண்டு தேஜி தேவா மீது ஸ்ப்ரே பண்ணினோம். ஒரு நரிக்குறவரை விட்டுப் பூனையைத் தூக்கில் தொங்க விட்டோம். அதே குறவர்தான் அணிலை தேஜிஸ்வினி கார் ஸ்டீயரிங்கில் கட்டி விட்டார். நடப்பதெல்லாம் அமானுஷ்யம் என்கிற பிரமையை ஏற்படுத்தினோம்!."



"குழந்தை விஷயம்?"

கார்கண்ணாடி நொறுங்கியது. ஸிஜாவின் மீதும் ஸைட் இன்ஜினீயர் மீதும் தோட்டாமழை பொழிந்தது. இருவருமே தோட்டா முத்தங்கள் பெற்றுச் சிதறினர்.

புகையும் துப்பாக்கி வாயை ஊதியபடி சுட்ட உருவம் பைக்கில் ஏறிப் பறந்தது!

ஸிஜாவின் செல்போன் தொடர்ந்து சிணுங்கியது. இரத்த வெள்ளத்தில் கிடந்த ஸிஜாவிடம் எந்தச் சிறு அசைவும் இல்லை!

மூன்றாவது திசையில் இருந்த புதியதோர் உருவம் இருட்டில் இயங்கும் பைனாகுலர் வைத்து ஸிஜா காரை உன்னித்தது.

பின் செல்போனை உயிர்ப்பித்தது. கரகரப்பான குரலில் பேசியது. "தேஜியா? உன்னுடைய சகா ஸிஜா இங்கு - பெசன்ட்நகர் பீச்சில் பிணமாய்க் கிடக்கிறாள்!'' செல்போனை ஆஃப் பண்ணி சிம் கார்டு மாற்றியது. செல்போனைப் பாக்கெட்டில் பத்திரப்படுத்திவிட்டு ஒரு குழந்தைப் பொம்மையை இன்னொரு பாக்கெட்டிலிருந்து வெளியே எடுத்தது. கைமாற்றி விளையாடியது. பின் பொம்மைக் குழந்தையின் தலையைத் தனியே திருகியெடுத்துக் காலில் இட்டு நசுக்கியது!

## 5

அம்மாவின் இடுப்பில்
உட்கார்ந்த மழலைக்கு
உலகே உரிமை
ஒரு பொம்மை போல

- பா. சத்தியமோகன்.

ஆம்புலன்ஸ் சைரன் செய்தபடி பேய்த்தனமாய்ப் பாய்ந்து பறந்து வந்தது. தொடர்ந்தன காவல்துறை வாகனங்கள். அனைத்தும் பெசன்ட் நகர் பீச் மணலில் முரண்டி நகர்ந்தன.

தூரத்தில் ஸிஜா இருக்கும் கார் தெரிந்தது. தேஜி காரிலிருந்து இறங்கினாள். கையில் துப்பாக்கியுடன் அந்தக் காரை நோக்கி ஓடினாள்.

ஸிஜாவின் இடது காதிலும், தோள்பட்டையிலும், வலது மார்பிலும் தோட்டாக் காயங்கள். இன்னும் இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. சைட் இன்ஜினீயரின் வலது கண்ணைக் காணவில்லை. அவன் ஏற்கெனவே இறந்து போயிருந்தான். ஸிஜாவை மெடிக்கல் யூனிட் கவர்ந்து முதலுதவிகள் செய்து மருத்துவமனைக்கு அவசர அவசரமாகக் கொண்டு போயினர்.

ஸிஜாவின் மைக்ரோ ரெக்கார்டரை எடுத்து ஆன் பண்ணினாள் தேஜி. ஸிஜா சைட் இன்ஜினியர் உரையாடல் ஓடியது கரகரப்பாய்.

தேஜியின் உதடுகள் வன்மமாய் முணுமுணுத்தன. ரியல் எஸ்டேட் அதிபர் கம் மேஜிஸியன் நார்பர்ட்!

வயர்லெஸ்ஸில் தேவாவுக்குத் தகவல் வந்தது. "சார்! ஒரு கார் கிழக்குக் கடற்கரைச் சாலையில் வெறித்தனமாய்ப் பறக்கிறது. காருக்குள் ஒரு முகமூடி அணிந்த மனிதன் இருக்கிறான். அவனிடம் ஒரு கைக் குழந்தை இருக்கிறது. அவனது காரைத் தொடர்ந்து போய் காரை நிறுத்தச் சொல்லி சமிக்ஞை செய்தோம். நிறுத்தாவிட்டால் சுட்டுவிடுவோம் என எச்சரித்தோம். உடனே அவன் குழந்தையைத் தலைகீழாய்ப் பிடித்துச் சுட்டுவிடுவேன் என மிரட்டுகிறான்! உங்கள் மேலான உத்தரவுக்காகக் காத்திருக்கிறோம்!"

"அவனைச் சுடாதீர்கள். அவனது காரை ஆரோக்கிய இடைவெளி விட்டுக் தொடருங்கள். எந்தத் தேவையில்லாத சாகசமும் வேண்டாம். புரிகிறதா?"

"சார்! அவனது கார் இடது பக்கம் கட் செய்து ஒரு பண்ணை பங்களாவை நெருங்குகிறது."

இரைச்சல் ஓடியது.

ரிமோட்டால் வெளிகேட் திறந்து உள்ளே போய்விட்டான். வெளி கேட் மீண்டும் மூடிக்கொண்டது!

இடத்தைத் துல்லியமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு தேவாவும் தேஜியும் காவல் துறை வாகனங்களுடன் பாய்ந்தனர்.

பங்களாவின் வெளி கேட் இயந்திர கதியாய்த் திறந்து கொண்டது.



மொட்டை மாடியில் ஓர் உருவம் மெஹா போனுடன் நின்றிருந்தது. அதன் இடது கையில் குழந்தை.

"வாருங்கள் தேவா... தேஜி!"

"நார்பர்ட்! இதென்ன விளையாட்டு? உடனடியாகச் சரணடையுங்கள். உங்கள் திருவிளையாடல்கள் அனைத்தும் எனக்குத் தெரிவும்!"

''தெரிஞ்சாத் தப்பில்லை தேவா. என் பாக்கித் திருவிளையாடல்களையும் நீங்க கண் குளிரப் பார்க்க வேணாமா? இந்தக் குழந்தை இடுப்புல எடை குறைந்த எலக்ட்ரானிக் ப்யூஸ்டு பாம் இணைத்துள்ளேன். நான் ஒரு குறிப்பிட்ட எண்ணை உச்சரித்தால் என் குரலை இனம் கண்டுகொண்டு பாம் வெடித்துவிடும். இந்தக் குழந்தைதான் மல்லிகை மருத்துவ மனையின் முதல் குழந்தை. இந்தக் குழந்தையின் இளம்தாயையும் பூங்கொடியையும் வரவழையுங்கள். இந்தக் குழந்தையை வைத்து நான் அவர்களிடம் ஒரு வியாபாரம் பேச வேண்டியிருக்கிறது. அவர்கள் இன்னும் அறுபது நிமிடத்தில் இங்கு இருந்தாக வேண்டும். இல்லாவிட்டால் கொலை செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட குழந்தை மெய்யாலுமே கொலையாகும்!"

குழந்தையின் இளம் தாய் ஜீவஜோதியும் மகப்பேறு மருத்துவர் பூங்கொடியும் வந்து சேர்ந்தார்கள்.

ஜீவஜோதியின் அழுகை பூத்த கண்களில் புதிய நம்பிக்கை. பூங்கொடி முழுதும் உயிர்த்திருந்தாள்.

"வா பூங்கொடி!"

"பிசினஸ் பேசுவதற்கு முகமூடி எதற்கு? கழற்றலாமே.."

உருவம் கழற்றியது. முகமூடியை மௌரியா ரியல் எஸ்டேட் அதிபர் நார்பர்ட்!

ஜீவஜோதி கதறினாள் என் குழந்தை பசியால் துடிச்சிருக்குமே... பால் புகட்னீங்களா?

நார்பர்ட் தனது கோட் பாக்கெட்டிலிருந்து பால் புட்டியை எடுத்துக் காட்டினான்.

"குழந்தையை ஒரே ஒரு தடவை தாங்களேன். பாத்துட்டு, கொஞ்சிட்டு, முத்தம் கொடுத்துட்டு, தாய்ப்பால் தந்துட்டு, கொடுத்திடுறேன்!"

"நோ சென்டிமென்ட்ஸ் எல்லாம் வியாபாரத்துக்குப் பின்னாடி!"

"உன் வியாபாரத்தைச் சொல்!"

"நான் வாங்கிக் கோடி கோடியாய்ச் சம்பாதிக்க இருந்த இடத்தை உன் தந்தை மருதநாயகம் வாங்கி மருத்துவமனை கட்டி விட்டான். உனது பெயரையும் மருத்துவமனை பெயரையும் கெடுக்கத்தான் அமானுஷ்ய தகிடு தத்தங்கள் பண்ணினேன். மருத்துவமனையின் முதல் குழந்தை கொலையானதுபோல் காட்சி ஜோடித்தேன். அது இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. பரவாயில்லை. ஒட்டுமொத்த மல்லிகை மருத்துவமனையை எனது பெயருக்கு மாற்றிக் கொடுத்துவிடு. குழந்தையை உயிருடன் ஒப்படைத்து விடுகிறேன். குழந்தையை நீ இளம் தாயிடம் ஒப்படைத்து விடலாம். எவள் உன்னைக் கொலைகாரி என சபித்தாளோ அவளே உன்னை மகராசி என வாயாறப் பாராட்டுவாள். உனக்கிருந்த அவப்பெயர் அகலும். சென்னையில் எத்தனை மகப்பேறு மருத்துவமனைகள் உள்ளன? அவைகளில் ஒன்றில் கூடவா உனக்கு வேலை கிடைக்காமல் போய்விடும்? யோசிக்க நீண்ட அவகாசம் தரமாட்டேன். வெறும் பதினைந்து நிமிடங்களில் நீ பதில் கூற வேண்டும்!"

மருதநாயகத்தின் முகமும் தெய்வநாயகியின் முகமும் இருண்டன. மருதநாயகம் கத்தினார். "அடச்சண்டாளப் பாவி! நீ கேக்கறது சரிதானா? யார் வீட்டுச் சொத்தை யார் கேக்கறது? நான் ஒண்ணும் ஊரைக் கொள்ளையடிச்சு வாங்கின சொத்தல்ல அது; நேர்மையா உழைச்சுச் சம்பாதிச்சது!"

"ஏய் கிழவா! வாயை மூடு.... நீ எப்படிச் சம்பாதிச்சிருந்தா எனக்கென்ன? எனக்குத் தேவை உன் இடம்?"

ஜீவஜோதி சடாரென்று பூங்கொடியின் கால்களில் விழுந்தாள். இரு புறங்கால்களிலும் முகம் புதைத்து அழுதாள். "உண்மை தெரியாம உங்களைப் போய் அவதூறா பேசிட்டேனே... என்னை மன்னிச்சிருங்கம்மா.... குழந்தை கொலையாகல உயிரோடதான் இருக்குங்கிற சந்தோஷம் இன்னும் பத்துப் பன்னிரெண்டு நிமிஷம்தான் நிற்கும்போல. நான் என்ன செய்ய, ஏது செய்ய? குழந்தையைக் கர்ப்பம் தரிச்ச நேரம் சரியில்லையோ? அம்மா தாயே! மகராசி!



இதை நான் கேக்கக் கூடாது! இருந்தாலும் குழந்தையின் பெயரால் கேட்கிறேன்! என் குழந்தை உயிருக்காக உங்க இடத்தை விட்டுக்குடுங்கம்மா. எங்க வீட்டு நகைகள், தாலிமனை அது இதுன்னு இருக்கிறதெல்லாம் கொண்டு வந்து உங்க காலடில கொட்றோம். என் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கம்மா...." பெருங்குரலெடுத்துக் கதறினாள். ஜீவஜோதியின் பெற்றோர், கணவன் பூங்கொடியின் கால்களில் வரிசையாக விழுந்தனர்.

"மெஹா சீரிடல்கள் சென்டிமென்ட்டின் ட்ரேஸ் தெரியுதே!" கெக்கலித்தான் நார்பர்ட்.

"பூங்கி! டாக்டர் பட்டத்தைத் தலையைச் சுத்தி விட்டெறி. அர்த்தமில்லாத மனிதாபிமானம் பார்த்து ஐந்து கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்தை இழந்து நடுத் தெருவில் நின்றுவிடாதே!" கூச்சலிட்டார் மருதநாயகம்.

தேஜி தோள்களைக் குலுக்கிக் கொண்டாள். "எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல!"

நேரம் கரைய ஆரம்பித்தது.

ஜீவஜோதி அழுது புரண்டு உருண்டு முகத்தில் அறைந்து கொண்டு தலைக் கேசத்தைப் பிய்த்துக் கொண்டு காட்சியமைப்பை அதகளப்படுத்த ஆரம்பித்தாள். மௌனமாக இருந்த பூங்கொடி குனிந்து ஜீவஜோதியை எழுப்பினாள். எழுந்திரு!"

எழுந்தாள். "என்னம்மா முடிவெடுத்தீங்க?"

"தாய்மைக்குச் சாதகமாகத்தான். பிறக்கும்போது மருத்துவமனைக் கட்டடத்தோடயா பிறந்தேன்? இறக்கும் போது மருத்துவமனைக் கட்டடத்தைக் கொண்டா போகப் போகிறேன்? (திரும்பி) நார்பர்ட்! மல்லிகை மருத்துவமனையை உங்களுக்குத் தானமாய் அளிக்கச் சம்மதிக்கிறேன்!"

நார்பர்ட் கண்களைக் குறுக்கினான். "இதுல ஒண்ணும் தாக்குமாக்குத்தனம் இல்லையே?"

"இல்லை. ஆனால் ஒன்று நார்பர்ட்- நீங்கள்தான் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். இடத்தை எழுதிக் கொடுத்த கணத்தில் குழந்தை என் கைக்கு வந்துவிட வேண்டும்!"

"இடம் வந்துட்ட பிறகு, குழந்தையை வச்சுக்கிட்டு நானென்ன பண்ணப் போறேன்?" இளித்தான். "ஏய் டிடெக்டிவ் தேஜி! என்ன ஒரே யோசனைல இருக்க? ஸிஜா செத்துட்டாளேன்னு வருத்தமா? ஸிஜாவையும் சைட் இன்ஜினியரையும் கொன்னுட்டு வந்திருக்கேனே... வந்தவன் இரு கொலைகளைப் பத்திப் பயமில்லாம இடத்தை அடையுறதில குறியா இருக்கேனேன்னு பாக்கிறியா? அந்த ரெண்டு பேர் கொலையையும் உன்னால் சாட்சியத்துடன் நிருபிக்க முடியாது. மீறி கேஸ் கோர்ட்டுக்குப் போனாலும் கையிலே இருக்கற காரை வைச்சு கேஸை ஒண்ணுமில்லாமப் பண்ணிடுவேன்."

தேஜி நெற்றியில் கை வைத்துக் கொண்டாள்.

நார்பர்ட் பத்திரத் தாள் எடுத்தான். பூங்கியிடம் நீட்டினான். "இம்! இதில மல்லிகை மருத்துவ மனையை எனக்குத் தானம் பண்றதா எழுதிக் கையெழுத்திடு! சாட்சி கையெழுத்துகளைத் தேஜியும் தேவாவும் போடட்டும்!"

பத்திரத்தாளைப் பூங்கொடி வாங்கினாள். பெற்றோரை சமாதானப்படுத்தினாள். "இது என் பிரச்னை அப்பா சாதுரியமாகக் கையாள்கிறேன்! இந்த மருத்துவ மனைதானே போகிறது? என்னிடம் உள்ள நம்பிக்கையை உழைப்பை, தெய்வத்தை யாருக்கும் நான் தானமாக எழுதி கொடுத்து விடவில்லையே? நீங்கள் பார்க்கவே மல்லிகை போன்ற பிரமாண்டமான கட்டடத்தைக் கட்டிவே தீருவேன்!"

இப்போது மருதநாயகம் அமைதியானார். மயக்க மருந்தியல் நிபுணன் சூரி சுடச்சுடத் தேநீர் தயாரித்து அனைவருக்கும் வழங்கினான்.

பத்திரத்தில் எழுதும் விஷயங்களை டிக்டேட் பண்ண ஆரம்பித்தான், நார்பர்ட். சூரி அவனுக்குத் தேநீர் தராமல் நகர்ந்தான்.

"எனக்குத் தேநீர் தர மாட்டாயோ?"

சூரி முறைத்தான்

"என்னடா முறைக்கிற? தேநீர் தராத இந்த ஒ காரணத்துக்காகக்கூட குழந்தையைக் கொன்று விடுவே தெரியுமா? கொண்டாடா!"



ட்ரேயை நீட்டினான். இரு கோப்பைகள். "இரண்டில் எது எனக்கு?"

"உன் விருப்பம் போல!" கோப்பைகளை மாற்றி மாற்றி விளையாடிவிட்டு நீலநிறக் கோப்பையை எடுத்து உறிஞ்சினான் நார்பர்ட்.

நார்பர்ட் தேநீர் முழுவதும் குடித்து முடித்த கணம் சூரி திரும்பி தேஜியைப் பார்த்துக் கண்ணடித்தான். நார்பர்ட் அதனைப் பார்த்து விட்டான். தொண்டையில் தீப்பற்றி எரிந்தது. நார்பர்ட், "டீயில் என்னடா கலந்த? இப்ப பார், குழந்தையை சிறுசிறு துண்டுகளாகச் சிதறடிக்கிறேன்! ஹக்!இஹ்! தொ.... தொண்... தொண்ணூற்றி தொண்ணூற்றி... எலக்ட்ரானிக் ப்யூஸ்டு பாம் வெடிக்கத் தேவையான எண்ணைக் கூற ஆரம்பித்தான்.

## 6

எந்தக் குழந்தையையும் கற்க
ஒரு பூவுடன் செல் அல்லது
பூவாக மாறு.

- பா. சத்தியமோகன்

"தொ...தொ... தொண்ணூற்றி...." குழறினான் நார்பர்ட். வாயிலும் நாசியிலும் இரத்தம் பூத்தது.

சூரி கைதட்டிச் சிரித்தான். "உன்னால நீ நினைச்ச நம்பரைச் சொல்ல முடியாது! மரணம் உன்மேல கொஞ்சம் கொஞ்சமாப் படர ஆரம்பிச்சிருச்சு! பார் பார்! நீ குழந்தையை வச்சிருக்கிற கை முழுக்கச் செயலிழந்து போச்சு பார்!"

நார்பர்ட்டின் கை தொய்ந்தது. சரக்கென்று பாய்ந்து கீழே நழுவிய குழந்தையைக் கைப்பற்றினான் சூரி. குழந்தையைத் தேஜியிடம் கையளித்தான். தேஜி குழந்தையைத் தேவாவிடம் நீட்ட - பாம் ஸ்குவாடு உதவியுடன் குழந்தையின் உடலில் பொருத்தப் பட்டிருந்த பாமைத் தேவா அகற்றினார்.

"போலீஸ் அனுமதியுடன் டீ குடிக்கும் தேநீரில் சயனைடு கலந்தேன். இனி உன்னைப் படைச்ச கடவுளே வந்தாலும் உன்னைக் காப்பாற்ற முடியாது! பை, நார்பர்ட்!"

தொமீரினான் நார்பர்ட். பாம் அகற்றப்பட்ட குழந்தை தாய் ஜீவஜோதியிடம் வந்து சேர்ந்தது. ஜீவஜோதி குழந்தையின் முகத்தில் முத்தமழை பொழிந்தாள். மருதநாயகம் ஓடிப்போய்ப் பத்திரத்தைக் கிழித்தெறிந்தார்.

பூங்கொடி சூரியனின் கைகளைப் பற்றிக் கொண்டாள். "உங்களுடைய வீரம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. மிகுந்த சாதுரியமாய்ச் செயல்பட்டுக் குழந்தையை உயிருடன் மீட்டுக் கொடுத்து விட்டீர்கள். நன்றி சூரி, நன்றி."

சிரித்தான் சூரி. "எதற்கு நன்றி சொல்றீங்க தேஜி? இது என் கடமை! நானும் மல்லிகை மருத்துவமனையின் ஊழியன் இல்லையா? எனது மருத்துவ மனைக்கு அவப் பெயர் வராமலிருக்க நான் சிறு துரும்பாவது கிள்ளிப் போட வேண்டுமில்லையா? தேநீரில் சயனைடு கலக்க அனுமதிச்ச காவல் துறைக்கும் என் முயற்சியை வெற்றியாக்கிய கடவுளுக்கும்தான் நான் நன்றி சொல்லணும், இனி நம் மருத்துவமனைக்கு ஏறுமுகம்தான்."

சூரியை அனைவரும் பாராட்டினர். நார்பர்ட்டின் பிணம் அப்புறப்படுத்தப்பட்டது. ஜீவஜோதியும் அவளது கணவனும் சூரியின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்தனர்.

சூரியின் கால்களை ஜீவஜோதியின் கண்ணீர் நனைத்தது. சூரி சங்கோஜினான். அப்படியே பின்னுக்கு நகர்ந்தான். "அய்யய்யோ! என்னங்கம்மா இது? என் கால்ல போய் விழுந்துக்கிட்டு! நான் ஒரு சாதாரணக் கருவி! உங்கக் குழந்தைக்காக தனது சொத்தையே துறக்கத் தயாராய் இருந்தாங்களே... பூங்கொடி... அவங்க கால்ல விழுங்க!"

பூங்கி அவசரமாய்க் குறுக்கிட்டாள். "யார் கால்லயும் யாரும் விழ வேண்டாம்! எல்லாம் நல்லபடியாக முடிஞ்சது. மனசுக்குப் பரம திருப்தியா இருக்கு. இனி என் மருத்துவ மனை திருஷ்டி நீங்கிச் சிறப்பாக இயங்கினா சரி!"

மருதநாயகம் குழந்தைக்குச் செயினும் கால்கொலுசும் அணிவித்தார்.

இரவு முழுக்கப் பூங்கியின் பங்களாவில் புதிய நரகாசுரர் அழிவுக்காகத் தீபாவளிக் கொண்டாட்டம் நடந்தது. பூங்கியின் தோழிகள் பாடி ஆடினர்!



மருதநாயகம் பூங்கியைக் கட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார். "இப்பத்தாம்மா என் நெஞ்சு லேசாச்சு. இந்த சந்தோஷத்தோடயே செத்திரலாம் போலிருக்கு!"

அப்பாவின் வாயை மென்மையாகப் பொத்தினாள். "இன்னும் நீங்க நூறு வருஷம் சௌக்கியமா வாழணும்ப்பா. நம் மல்லிகை மருத்துவமனை அடையாறு ஆலமரம் போல் தழைத்தோங்குவதை நீங்க கண் குளிரக் காண வேண்டும்!"

பங்களாவுக்குள் ஆட்டம் பாட்டம் தொடர - இருட்டில் நின்றிருந்த ஒரு உருவம் பற்களை நறநறவெனக் கடித்தது. "கூத்தடியுங்க அற்பப் பதர்களா! உங்களின் மகிழ்ச்சி படு தற்காலிகம். The absolute terror will strike back with full bang!"

முழங்கால் வரை நீண்டிருந்த கோட் பாக்கட்டிலிருந்து ஒரு பார்பி பொம்மையை எடுத்தது. பொம்மையை இடக்கைக்கு மாற்றிக் கொண்டு பளபளக்கும் கத்தியை விரித்தது. கத்தி தாறுமாறாய்க் கீறி பார்பி பொம்மையின் ஜிகினா ஆடைகளைக் கிழித்தெறிந்தது. பார்பி பொம்மையினுள் பிரத்தியேகமாகப் பதுக்கி வைக்கப்பட்ட பதிவுக் குரல் கிறீச்சிட்டது.

இன்டென்ஸிவ் கேர் யூனிட்

படுத்திருந்தாள் ஸிஜா. காயங்கள் ட்ரஸிங் செய்யப்பட்டிருந்தன சற்றே எடை குறைந்திருந்தாள்.

தேஜியையும் பூங்கியையும் பார்த்து முறுவலித்தாள் ஸிஜா. பூங்கி ஸிஜாவுக்குப் பூங்கொத்து அளித்து விரைவில் குணமடைய வாழ்த்தினாள்.

"எல்லாம் நல்லபடியா நடந்து முடிஞ்சிருந்தும் - ஒரு விஷயத்தில் என் மனசு ஆறவே இல்லை!"

"அதென்ன விஷயம் ஸிஜா?"

"நார்பர்ட் என் கையால அடி வாங்காம - சயனைடு குடிச்சுப் பொசுக்குன்னு செத்து போய்ட்டானே - அதான் என் மனசு ஆறவே இல்லை!"

சிரித்தாள் தேஜி, "மொதல்ல உன் உடல் காயங்களை ஆற்று. அப்புறமா மனக் காயத்தை ஆற்றலாம் குண்டாம்மா!"

"நார்பர்ட்டை எரிச்சாங்களா, புதைச்சாங்களா?"

"புதைச்சாங்க. ஏன் கேக்ற?"

“குணமானவுடன் மொத வேலை அவன் கல்லறையை எட்டி உதைக்கிறதுதான்!”

“சரி உதைக்கலாம்!”

“பூங்கி! இப்ப மல்லிகை மருத்துவமனை எப்படி நடக்குது?”

“பிரமாதமா நடக்குது. தினசரி குறைந்த பட்சம் பத்துப் பிரசவங்கள் பார்க்கிறேன். இந்த இருபது நாளில் இருநூறு பிரசவங்கள். அவற்றில் எட்டு சிஸேரியன் கேஸ்கள். ஒன்றில் கூடத் தோல்வி கிடையாது!”

“இந்த விஷயத்தைக் கேட்டவுடன் என் காயங்களின் வலி காணாமல் போய்விட்டது!”

“ஸிஜா! நாங்கள் புறப்படுகிறோம். நாளை நான் மட்டும் வருவேன். ஓகே?” தேஜியும் பூங்கியும் கிளம்பினர்.

செவிலியர் நங்கை மீண்டும் ஆக்ஸிஜன் மாஸ்க்கை எடுத்து ஸிஜாவின் முகத்தில் பொருத்தினாள். சில பல நொடிகள் அமைதியாக இருந்த ஸிஜாவின் முகம் வெளிறியது. மூச்சுத் திணறினாள். மாஸ்க்கின் உள் கண்ணாடிச் சுவரில் பனி படர்ந்தது. ஸிஜாவின் கால்கள் உதைத்துக் கொண்டன. கண்ணின் கருவிழிகள் உயரே எழுந்தன.

செவிலியர் நங்கை ஓடிவந்தாள். முரண்டும் ஸிஜாவை அடக்கப் பார்த்தாள். இன்டர்காமுக்கு ஓடி உதவி வேண்டினாள். மருத்துவர் முகாம் ஓடிவந்தது. ஒரு மருத்துவர் ஆக்ஸிஜன் மாஸ்க்கை அகற்றினார். ஸிஜா நடப்பு நொடியில் சுவாசிக்க மறுத்தாள். மருத்துவர்கள் செயற்கைச் சுவாசம் கொடுத்தனர். மார்புப் பகுதியை மசாஜ் செய்தனர். சிறப்புக் கருவி வைத்து இதயத்துக்கு மின் அதிர்ச்சி கொடுத்தனர்.

மானிட்டரில் டிஜிட்டல் கோடு படுக்கை வசத்தில் தடுமாறியது. பின் சற்றே மேலும் கீழும் நடுங்கியது. மருத்துவர்களின் அசுர முயற்சிக்குப் பின் ஸிஜாவின் சுவாசம் மீண்டது.



ஸிஜாவின் நாசியிலிருந்து சளியும் தொண்டையிலிருந்து உமிழ்நீரும் கையிலிருந்து இரத்தமும் சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

மூத்த மருத்துவர் சந்தேகத்துடன் ஆக்ஸிஜன் சிலிண்டரைப் பார்த்தார். பின் அதனைச் சோதனைக்கு அனுப்பினார். ஸிஜா வெண்டிலேட்டருடன் இணைக்கப்பட்டாள்.

“ஹௌ இஸ் ஷி நௌ டாக்டர்?” இளம் மருத்துவர் வினவினார்.

“நோயாளி கோமாவில் ஆழ்ந்துள்ளார். கோமாவுக்கான காரணம் சில பரிசோதனைகளுக்குப் பின் முழுமையாகத் தெரிய வரும். நர்ஸ்! பி கேர்ஃபுல் வித் திஸ் பேஷண்ட்!”

ஸிஜா காய்கறிக் குவியல் போல் கிடந்தாள்.

தலைமை மருத்துவர் தளர்வாய் அமர்ந்திருந்தார்.

பரிசோதனை முடிவுகள் வந்து சேர்ந்தன.

ஆக்ஸிஜன் சிலிண்டரில் எந்த வாயுவும். கலக்கப்படவில்லை. ஸிஜாவின் இரத்தத்தில், சளியில், உமிழ்நீரில் அபாயகரமாக எதுவும் தட்டுப்படவில்லை.

மருத்துவர் நெற்றிப் பொட்டைத் தட்டிக் கொண்டார். பின் என்னதான் நடந்தது? நோயாளி ஸிஜா எப்படி கோமா நிலை பாய்ந்தாள்?

விடுவிக்க முடியாத விடுகதைகள் கிளைத்துக்கொண்டே போயின.

மூன்று மாதங்களுக்குப் பின்...

மல்லிகை மருத்துவ மனை பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது.

செவிலியர் நங்கை ஓடிவந்தாள்.

“ஒரு டெலிவரி கேஸ் வந்துள்ளது. ஹாஸ்பிட்டலே நடுங்கும் அளவுக்கு ரகளை பண்ணிக் கொண்டிருக்கிறார்! சீக்கிரம் வாங்க டாக்டர்!”

பூங்கி எழுந்தோடினாள். துள்ளத் துடித்துக் கொண்டிருக்கும் கர்ப்பிணிப் பெண்ணை நெருங்கினாள். வயிற்றை ஆராய்ந்தாள். அறைக்குள் சென்றனர். உபயோகித்து எறியும் கையுறை அணிந்து கொண்டு கர்ப்பிணிப் பெண்ணின் பிறவிப் பாதையை ஆராய்ந்தாள். கர்ப்பிணிப் பெண்ணின் மெடிக்கல் ரிக்கார்டுகளை உன்னித்தாள்.

ஆபரேஷன் தியேட்டருக்குக் கர்ப்பிணிப் பெண் கொண்டு செல்லப்பட்டாள். மயக்க மருந்து கொடுக்கப் பட்டது. டிடி.ஊசி போடப்பட்டது- கண்களில் பஞ்சு வைத்து மூடப்பட்டது.

பூங்கொடி கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கீறினாள். வெள்ளைச் சதை பிளந்து இரத்தம் பூத்தது. கீறலை நீளப்படுத்தினாள். அம்னியாடிக் திரவத்தில் குழந்தை. குழந்தையின் கழுத்தைத் தொப்புள் கொடி சுற்றியிருந்தது. கர்ப்பப் பையில் பீறிட்ட இரத்தத்தையும் திரவத்தையும் காட்டனால் ஒற்றி ஒற்றி எடுத்தனர்.

பூங்கி குழந்தையை லாகவமாகத் தொப்புள் கொடிச் சுற்றலிலிருந்து மீட்டு வெளியில் எடுக்க முயற்சித்தாள்.

அதற்குள் அந்த விபரீதம் பூத்தது!

தொப்புள் கொடியின் நிறம் மாறியது. குழந்தை திணறியது. கர்ப்பிணிப் பெண்ணின் சுவாசம் நிலை குலைந்தது. நாடித் துடிப்பு இறங்கியது.

போர்க்கால அவசரமாய்ச் செயல்பட்டாள் பூங்கி.

ஆனாலும்...

ஆனாலும்...

தாயும் சேயும் ஒரே நேரத்தில் மரித்தனர்!

பல நிமிடம் போராடித் தோற்ற பூங்கி, இரத்தம் பூசிய கைகளால் முகத்தை அறைந்து கொண்டு கதறியழுதாள்!

அவளின் ஓலம் மருத்துவமனை வளாகம் முழுக்க ஸ்நூக்கர் பந்து போல் பாய்ந்து பாய்ந்து எதிரொலித்தது!

பபூன் காஸ்ட்யூமில் இருந்த மரண தேவதை விழுந்து விழுந்து சிரித்தாள்!



## 7

இறந்த மனிதனுக்காக
இரங்கற்பா
பாடப்படும் அரங்கு
அதிர்கிறது ஒரு நொடி
ஆனந்தத்தில்
தத்தி நடந்துவரும்
குழந்தையின் கால் கொலுசு.

- பா. சத்தியமோகன்

இறந்து போன கர்ப்பிணிப் பெண்ணின் சடலத்தைப் பார்க்க அவளது கணவன் அனுமதிக்கப்பட்டான். அவனுக்கு வயது 28 இருக்கும். இறந்த தாய்க்கு வயது 22 இருக்கக்கூடும்.

மனைவியின் முகத்தைப் பார்த்ததும் அழுகை ஒழுங்கீனமாய் வெடித்தது. பிணத்தை உலுக்கினான். முகத்தைத் தட்டினான். தலைக் கேசத்தைக் கோதிவிட்டான்.

"குட்டிம்மா! குட்டிம்மா! எந்திரிச்சுடு குட்டிம்மா! நீ இல்லாம நான் இருக்க முடியாது குட்டிம்மா! நமக்குக் கல்யாணமாகி 11 மாசமாகுது. ஆனா இந்தப் பதினோரு மாசத்துல நமக்குள்ள பதினோராயிர வருட நெருக்கம் வந்துச்சே குட்டிம்மா! முதலிரவு அன்னைக்கு விடிய விடிய உன் கதை, என் கதை பேசிட்டு விடியக் காத்தால கடிகார முட்கள் போல் தரையில் படுத்துத் தூங்கிப் போனோமே... ஞாபகமிருக்கா? ஒவ்வொரு நாளும் உன் வயித்துல உள்ளங்கை வைச்சு வயிற்றுக்குள்ளிருக்கும் கன்னுக் குட்டியின். நகர்ச்சிகளை அவதானிப்பேனே... அய்யோ... இப்ப தாய்- சேய் நகர்ச்சிகள் உறைஞ்சு போச்சே.... தலைப் பிரசவம்னு எக்கசக்கமா பயந்த! நான்தான் ஒண்ணுமில்ல.. ரொம்ப சிம்பிள். பிரசவம் ரொம்ப ரொம்ப ஈஸின்னு சொல்லி உன்னை ஏமாத்திட்டேனே!"

செவிலியர் நங்கை உட்பட்டாள். பதவிசாகப் பேசினாள். "வெளிய போலாம் வாங்க!"

சொன்னவளைத் திரும்பி முறைத்தான். "உனக்குக் கல்யாணமாய்ருச்சா?"

"இல்ல..."

“உனக்குத் தாம்பத்தியத்தின் அருமை பெருமை தெரியாது கணவன் - மனைவி உறவின் உன்னதம் புரியாது! எட்டிப்போ!”

“இது மார்ச்சுவரி அறை சார். தயவுசெஞ்சு வெளில வாங்க சார்!”

“எனக்கு ஒரு உதவி பண்ணு!”

“சொல்லுங்க சார்!”

“எனக்கு ஏதாவது விஷ ஊசி போட்டுச் சாகடிச்சிருங்க! என் மனைவி- குழந்தையோட போய் நானும் படுத்துப்பேன்!”

“நீங்க இப்படிப் பேசினா நான் என்ன பண்றது?”

“நீ ஒண்ணும் பண்ண வேணாம். டிஸ்டர்ப் பண்ணாம விலகு. நான் இன்னும் என் குட்டிம்மாகிட்ட பேசணும்!”

செவிலியர் நங்கை இன்டர்காமுக்கு நடந்தாள்

“குட்டிம்மா! ரொம்பக் குளிருதா? பாப்பாவுக்கு?”

பூங்கொடி தனது சகாக்கள் சமிதா, விஜி, பாவனா, அனி, கங்கையுடன் உட்பட்டாள். பூங்கியின் முகம் அழுதழுது வீங்கியிருந்தது.

“வாங்க டாக்டரம்மா! சேச்சே... உங்களைப் போய் டாக்டரம்மான்னு சொல்லிக்கிட்டு... வாங்க டாக்டர் தங்கச்சி!”

“உங்க உணர்வு எனக்குப் புரியுது! வெளில வாங்க!” தோளில் தட்டிக் கொடுக்க முயன்றாள் பூங்கி. விலகிக் கொண்டான்.

“வெளில வந்தா... என் குழந்தை, என் குட்டிம்மா உசுருகளைத் திருப்பிக் குடுத்திருவிங்களா, டாக்டர் தங்கச்சி?”

மௌனித்தாள் பூங்கி.

கங்கை, “சரி வாங்க! என் அறைக்குப் போய்ப் பேசலாம்!”

“வர முடியாது குட்டிப் பிசாசு!”

சமாதானப்படுத்தும் ஒவ்வொருவரையும் கடுமையான வார்த்தைகளால் குத்திக் கிழித்தான் அவன்.

வராண்டாவில் நடந்து வந்து கொண்டிருந்தான் சூரி. மார்ச்சுவரி அறை களேபரங்களைக் கண்ணுற்றான்.



வேகமாய் ஓடிப்போய் விஜியை வினவினான். “என்ன நடக்குது இங்க?”

விஜி நடந்ததைக் கூறினாள். பூங்கியிடம் வந்தான் சூரி. “வணக்கம் டாக்டர்!” அவனைப் பார்த்ததும் முறுவலித்தாள். நார்பர்ட்டை சயனைடு தேநீர் கொடுத்துத் தனக்கு உதவிய வனாயிற்றே!

“நீங்க எல்லாம் போங்க. நான் இந்தப் பிரச்னையை டீல் பண்றேன்!”

ஆறு பெண் மருத்துவர்களும் நகர்ந்தனர். பூங்கி திரும்பித் திரும்பிப் பார்த்தபடி போனாள்.

சூரி அந்த இளம் கணவனிடம் போனான். “ஐ எம் நாட் எ கைனகாலஜிஸ்ட். நானும் உங்களைப் போலொரு ஆண்மகன். உங்க மன உணர்வு எனக்கும் புரியும்!”

“உங்களுக்குக் கல்யாணமாயிருச்சா?”

“இ..இல்ல, ஏன் கேக்குறீங்க?”

“கல்யாணமாகாத ஆணுக்குக் கல்யாணமானவனின் ஃபீலிங்க்ஸ் எப்படி புரியும்?”

“எனக்குப் புரியும்!” இளம் கணவனின் கைகளைப் பற்றிக் கொண்டான் சூரி. “எனக்கு நல்லாப் புரியும் நண்பா! (நிறுத்தி) ஆண்டாண்டுகாலம் அழுது புரண்டாலும் மாண்டார் மீள்வதுண்டோ? ? என்பார்கள். மரணம் - பரிசா, சாபமான்னு நம்ம சின்ன மண்டைக்குப் புரியறதில்ல. நாம பிறந்த நொடியிலிருந்தே மரணம் பிடிச்சு விழுங்கத் துரத்திக்கிட்டே வருது நம்பள. போன ஜென்மத்தின் விட்ட குறை தொட்ட குறை, உங்க மனைவி பிரசவத்துல குழந்தையோட இறந்துபோயிட்டாங்க. துக்கம்தான். அழுங்க. துக்கம் முழுக்க கரைஞ்சு ஓடுறவரைக்கும் அழுங்க. ஆனா யாரையும் தேவையில்லாம மனசால துன்புறுத்தாதீங்க. மார்ச்சுவரில சடலங்களோட படுத்துக்கிட்டா மரணம் தேடி வராது; வியாதிதான் வரும்.” சூரியின் கைகளில் முகம் புதைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதான் இளம் கணவன்.

“எனக்குத் தெரிஞ்சு பிரசவம் பார்த்த டாக்டர் பூங்கொடி மேல எந்தத் தப்பும் இல்லை. விஷயம் அவங்க கை மீறிருச்சு.

என்னதான் மருத்துவத் தொழில் நுட்பங்கள் உயர்ந்தாலும் பிரசவத்தில் அபூர்வமாக ஏற்படும் மரணங்களை முழுமையாகத் தடுக்க முடியாது!"

"நீங்க சொல்றது உண்மைதான் நண்பா!"

"வாங்க! வராண்டால நின்னு பேசுவோம்!" வெளியே வந்தனர். டிஷ்ஷு பேப்பர் கொடுத்து முகத்தைத் துடைத்துக் கொள்ளச் சொன்னான் சூரி.

"ஸ்மோக் பண்ணுவீங்களா?"

"பண்ணுவேன்."

"இப்ப பப்ளிக் பிளேஸ்ல ஸ்மோக் பண்ண முடியாது. இந்தாங்க சிகரெட்! பற்ற வைக்காம வெறுமனே கைவிரல்ல வச்சுக்கங்க!"

வைத்துக் கொண்டான் இளம் கணவன்.

''என் குட்டிம்மா மேல நான் எவ்வளவு காதல் வைச்சிருந்தேன் தெரியுமா?"

"சரி சரி. உங்க அந்தரங்கங்களை வெளில சொல்லாதீங்க. கடிதமா எழுதி எழுதிப் பத்திரப்படுத்திக்குங்க. நாளடைவில் நீங்கள் எழுதும் கடிதங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போய் முழுமையாய் நிற்கும். நின்றால் நீங்கள் மறுமணத்திற்குத் தயார் என்று அர்த்தம். கடிதங்கள் தொடர்ந்து கொண்டே இருந்தால் உங்களின் காதல் நீர்க்க மறுக்கிறதென்று அர்த்தம்!"

தொடர்ந்து இருவரும் இரண்டு மணிநேரம் பேசினர். துக்கம் தொலைத்திருந்தான் இளம் கணவன்.

"என் மனபாரத்தை இறக்கி வைத்ததற்கு நன்றி சூரி!"

"ரைட்டோ நண்பா! போய்த் தகன காரியங்களைக் கவனியுங்க!"

இளம் கணவன் கும்பிட்டபடி நடந்து போனான்.

சோப் பெட்டி போன்று அந்த அறை சிறியதாய் அமைந்திருந்தது.

சூரி லுங்கி டீ-ஷர்ட்டில் இருந்தான். அறை முழுக்கப் புத்தகங்கள் இறைந்து கிடந்தன.

ப்ரடரிக் ஃபோர்த்ரித்

ராபின் குக்



ஜெப்ரி ஆர்ச்சர்.

புதியதொரு ஆங்கில நாவலை வாசித்துக் கொண்டிருந்தான் சூரி. அறைக் கதவு தட்டப்பட்டது. படித்த பக்கத்தை அடையாளத்துக்கு மடித்து விட்டு எழுந்தான்.

கதவைத் திறந்துவிட்டு அதிர்ந்தான். பூங்கொடி!

''வாங்க டாக்டர்!'' அறைப் பொருட்களை ஒழுங்குப்படுத்த முயன்றான்.

"லீவ் இட் சூரி! எனக்காக அறையைத் தலைகீழாய் மாற்றிப் போட்டு விடாதீர்கள்!"

"என்ன விஷயம் டாக்டர்?"

"உங்களுடன் ஏனோ பேசத் தோன்றியது. வந்தேன்.... டாக்டர் பூங்கொடியாக வரவில்லை. வெறும் பூங்கியாக வந்திருக்கிறேன்.... உக்காரலாமா?"

"ஓ!" அமர்ந்தாள்.

"தேநீர் சிறப்பா தயாரிப்பீங்க இல்லையா? எனக்கு ஒரு கோப்பை தேநீர் வேண்டும்!"

வேகமாகச் செயல்பட்டு இரு கோப்பைகளில் தேநீர் கொண்டு வந்தான்.

''எனக்கு எந்தக் கோப்பை?'' கோப்பைகளுடன் விளையாடினாள். ஒன்றையெடுத்து உறிஞ்ச ஆரம்பித்தாள்.

"உங்க ஒய்ப் எங்க வேலை பார்க்குறாங்க?"

"எ...எ...எனக்கு இன்னும் கல்யாணமாகல டாக்டர்!"

அந்த ஒரு வார்த்தைக்குத்தான் யுகம் யுகமாய்க் காத்திருந்தது போல் உயிர்த்தாள் பூங்கி. "டாக்டர் வேணாம், பூங்கின்னு கூப்பிடுங்க சூரி!"

"சரி பூங்கி!"

"உங்களுக்குச் சமையல் தெரியுமா சூரி?"

"நான் ஒரு ரசனையான சமையல்காரன்! எனக்குத் தெரியாத சைவ - அசைவ உணவு வகைகளே கிடையாது! புதுப் புதுச் சமையல் அயிட்டங்களைக் கண்டுபிடிக்கறது என் பொழுதுபோக்கு!"

"ஆண்களுக்குச் சமையல் தெரிவது ஆபத்து! சமையல் தெரிந்த ஆண்களுக்குப் பெண்களின் அருமை தெரியாது!

உங்களுக்குச் சமையல் தெரியறதுனாலதான் கல்யாணம் பண்ணிக்காம இருக்கீங்க."

சிரித்தான் சூரி.

"எனக்கு என்னமோ உங்களை ரொம்ப பிடிச்சுப் போச்சு சூரி. உங்க சமயோஜிதம் நார்பர்ட்டை வீழ்த்திச்சு! உங்க பேச்சுத் திறமை அந்த இளம் கணவனை அமைதிப் படுத்துச்சு!"

"ரெண்டையும் மிகைப்படுத்தாதீங்க பூங்கி. நான் சார்ந்திருக்கும் மருத்துவ மனைக்கு என் கடமையைச் செய்தேன்!"

"உங்களுக்குப் பெண் பார்த்துக்கிட்டு இருக்காங்களா சூரி?"

"ஆமா, ஆனா நான் வேணாம்னு சொல்லிட்டேன்"

"ஏன்?"

"நான் ஒரு கனவுப் பெண்ணுக்காகக் காத்திருக்கிறேன்!"

"இன்னுமா நீங்க அந்த கனவுப் பெண்ணைச் சந்திக்கல?"

"சந்திச்சிட்டேன்!"

"அவங்க யார்? அவங்க எங்க இருக்காங்க?"

"அவங்கதான் பூங்கி! இதோ என் எதிரிலே இருக்காங்க!"

சிரித்தாள் பூங்கி. சிரித்தான் சூரி. சிரித்தாள் காதல் தேவதை. சிரித்தது மரண தேவதை!

## 8

உலக வக்ரங்களை
கணிதத்திலுள்ள
அத்தனை எண்களாலும் பெருக்கு
அத்தனை நீண்ட இலக்கங்கள் கொண்ட
இருள்மையை
மைக்ரோ நொடியில்
கரைக்கிறதா இல்லையா பார்
குழந்தை வாய் எச்சில்

- பா. சத்தியமோகன்

கர்ப்பிணிப் பெண் குழந்தை போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் நகல் தேஜஸ்வினிக்கு வந்திருந்தது.



தேஜி எதிரில் அமர்ந்திருந்தாள் பூங்கி.

ரிப்போர்ட்டை வாசித்து நிமிர்ந்தாள். நான் ஏற்கெனவே சொல்லல? கர்ப்பிணித் தாய், பிரசவச் சிக்கல்களால் சாதாரணமாகவே இறந்துள்ளாள். குழந்தையின் கழுத்தைத் தொப்புள் கொடி சுற்றியதால் சுவாசிக்க முடியாமல் இறந்திருக்கிறது! மற்றப்படி இந்த இரு மரணங்களுக்கும் வேறெந்த விசேஷ காரணமும் இல்லை!

பூங்கி தலையாட்டிக் கேட்டுக் கொண்டாள். "எல்லாம் சரி தேஜி. ஆனாலும் என் மனசு என்னத்துக்கோ கிடந்து அடிச்சுக்குது. எனது பிரச்னைகள் எதுவுமே சுலபமாக முடிவதில்லை. அனுமன் வால் போல் நீண்டு கொண்டே போகின்றன! இந்தத் தாய் - சேய் மரணம் இனி என் மருத்துவமனையில் நிகழாமல் இருந்தால் சரி!"

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"நார்பர்ட் மரணத்துடன் அவன் நிகழ்த்தி வைத்த அமானுஷ்யங்கள் முடிவுற்றதாக நான் கருதவில்லை. Some white darkness prevailing in my hospital நீங்க நாளைலயிருந்து தொடர்ந்து ஒரு மாசத்துக்கு என் மருத்துவ மனைக்கு வரணும். மருத்துவ மனையின் எல்லா மூலை முடுக்குகளையும் நீங்க ஆராய்ந்து பார்க்கணும். உங்க ஒரு மாச அலசல் சொல்ற முடிவுலதான் என் வருங்காலமே இருக்கு!"

சிரித்தாள் தேஜி. "ஓ.கே வருகிறேன். தென்- சூரி எப்படி இருக்கிறார்?"

"எந்த சூரி தேஜி?"

"டாக்டரம்மா... நடிக்காதே டாக்டரம்மா... நார்பர்ட்டைத் தீர்த்துக்கட்ட காவல் துறைக்கு உதவின ஹீரோ சூரியை உனக்குத் தெரியாது? அன்னைக்கு நீ அவனைப் பார்த்த பார்வையோட அர்த்தம் எனக்கு நல்லாவே தெரியும்! யூ லவ் ஹிம், இஸின்டிட்?"

தலை குனிந்து முறுவலித்தாள் பூங்கி.

"உன் காதலை அவனுக்குச் சொல்லிட்டியா?"

"ரெண்டு பேருமே ஒரே நேரத்துல காதலை வெளிப் படுத்திக்கிட்டோம்!"

படுத்திக்கிட்டோம்!"

"எப்பக் கல்யாணம்?"

"சேச்சே... கல்யாணம் ரெண்டு வருஷம் கழிச்சுத்தான். அதுவரை எங்கள் சைவக் காதல் தொடரும்!"

"அட்வான்ஸ் காங்கிராட்ஸ் பூங்கி!"

"நன்றி!"

"நீ கிளம்பு. நாளைலயிருந்து நான் உங்க மருத்துவ மனைக்கு வந்து போறேன். ஒ.கே?"

"ஓகே!"

பூங்கொடி போவதைப் பார்த்துக் கொண்டே இருந்தாள் தேஜி.

தொலைபேசி அழைத்தது.

எதிர் முனையிலிருந்து தலைமை மருத்துவர் பேசினார். "ஒரு சந்தோஷமான செய்தி தேஜி! ஸிஜா கோமாவிலிருந்து எழுந்துவிட்டாள்!"

ஸிஜா மெலிந்து கறுத்திருந்தாள். காயம் இருந்த இடங்களில் தழும்புகள்.

தேஜி இன்டென்ஸிவ் கேர் யூனிட்டுக்குள் உள்ளோடி ஸிஜோவைக் கட்டிக் கொண்டாள். "குண்டம்மா! மீண்டும் உயிர்த்தெழுந்து வயித்துல பாலை வார்த்திட்டா!"

சோகையாய்ப் புன்னகைத்தாள்.

"டியாரா ஸ்விஸ் போயிருக்கார். நீ ரெக்கவரான விஷயத்தை ஐ.எஸ்.டில தெரிவிச்சிட்டேன். வாழ்த்துக்கள் கூறினார்!"

நார்பர்ட் மரணத்துக்குப் பின் நடந்த அனைத்து விஷயங்களையும் கேட்டறிந்து கொண்டாள்.

ஸிஜாவின் உதடுகள் முணுமுணுத்தன. இன்னும் நொடிகளும் தீரவில்லை; மர்மங்களும் தீரவில்லை!

மல்லிகை மருத்துவமனை

கார்ஸா சறுக்கி நின்றது. தேஜியும் ஸிஜாவும் இறங்கினர். மருத்துவமனை பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது.

எங்கு பார்த்தாலும் கர்ப்பிணிப் பெண்கள் நடமாட்டம். பிரசவப் பெண்களை அழைத்து வந்த உறவினர் கூட்டங்கள் மரத்தடிகளில் இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள்.

சில அறைகளைத் தாண்டும் போது பச்சைக் குழந்தைகளின் "ங்கா... ங்கா...." கேட்டன.



தேஜி ஒரு பக்கமாயும் ஸிஜா ஒரு பக்கமாயும் பிரிந்து நடந்தனர்.

ஸிஜா மருத்துவர்கள் ஓய்வறைக்குள் போனாள்.

பாவனா பணிமுடிந்து திரும்பியிருந்தாள்.

கண்ணாடி முன் நின்று கொண்டு சீருடையிலிருந்து வண்ண ஆடைக்கு மாறினாள்.

மாறும்போதே கண்ணாடியில் தெரியும் பிம்பத்தைப் பார்த்து "ஹலோ" கூறினாள். முதலில் தன்னைத்தான் அவள் விளிப்பதாக நினைத்த ஸிஜா அவள் பார்வையின் கோணம் அறிந்து பதுங்கினாள். மீண்டும் பாவனா கண்ணாடி பார்த்து "ஹலோ" கூறினாள். ஆனால் இந்தத் தடவை ஆண் குரலில் விளித்தாள். தொடர்ந்து குரலை ஏழெட்டு விதமாய் மாற்றி "ஹலோ" சொல்லிப் பார்த்தாள்.

விதிர்த்துப் போனாள்.

சில நொடிகளுக்குப் பின் பாவனா பின்வருமாறு பேச ஆரம்பித்தாள். "என்ன மலைச்சுப் போய் நிக்கிற? மல்லிகை மருத்துவமனைல வரிசையா நடக்குற சம்பவங்களைப் பாத்து வருத்தப்படுறியா. சந்தோஷப்படுறியா?"

இன்னொரு குரலில் அவளே பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

"இதென்ன கேள்வி இது? சந்தோஷம்தான், பரம சந்தோஷம்தான். ஆனா இது பத்தாது!"

"பத்தாதுன்னா வேற இன்னும் என்னென்ன ஆகணும்னு எதிர் பாக்குற?"

"நார்பர்ட் கையால ஜீவஜோதி குழந்தை செத்திருக்கணும் . அல்லது பூங்கியின் சொத்து நார்பர்ட் கைக்குப் போய், பூங்கி நடுத்தெருவுல நின்றிருக்கணும்!"

"இவ்வளவு துவேஷம் பூங்கி மேல ஏன்?"

"நானும் அவளும் மருத்துவம் படிக்கிறப்ப எனக்கும் அவளுக்கும் ஆயிரம் தடவை சின்னச் சின்ன விஷயங்கள்ல சண்டை வந்திருக்கு. என்னை எப்படி எப்படியெல்லாம் அவமானப்படுத்தியிருக்கா தெரியுமா? அதெல்லாம் நான் இன்னும் மறக்கல..."

"பூங்கி மேல வெறுப்பை வச்சுக்கிட்டு அவ மருத்துவ மனைல ஏன் பணி புரிய வந்தே?"

"பூங்கிக்கு ஏதாவது பிரச்சனை வரணும் அல்லது நாமே பிரச்சனை ஏற்படுத்தணும். அவ அந்தப் பிரச்சனைகளி மாட்டித் தவிக்கிறதை நான் கண்ணாரக் கண்டு ரசிக்கணு அதற்காகத்தான் பூங்கியின் தந்தை கூப்பிட்டது மல்லிகைல பணி புரியத் தலையாட்டினேன்!"

"நார்பர்ட் விஷயம்தான் முடிஞ்சு போச்சே. இனி பூங்கிக்கு நிம்மதிதானே?"

"அப்படிச் சொல்ல முடியாது!"

"பின்னே?"

"ஒரு சிஸேரியன்ல தாயும் சேயும் மரணம். அது தொட சிஸேரியன் மரணங்களுக்கான பிள்ளையார் சுழி!"

"இதென்ன புதுக் குண்டைத் தூக்கிப் போடுற?"

"புதுக்குண்டிற்கு அழிவு சக்தி அதிகம்!"

"நீ சொல்றதைப் பார்த்தா நடந்த தாய் - சேய் மரண திட்டமிடப் பட்டது ஆகிறதே?"

"இருக்கலாம்!"

"தொடரப்போகும் தொடர் சிஸேரியன் மரணங்களுக் சூத்திரதாரி யார்?"

"தெரியாது!"

"பொய் சொல்றே!"

"நீதான், நீதான் ஏதோ பண்ணி சிஸேரிய மரணங்களைத் தொடரப் போற!"

"என் பழிவாங்கும் வெறி மீது உனக்கிருக்கு நம்பிக்கைக்கு நன்றி!"

"நேரடியாகச் சொல். சூத்திரதாரி நீதானே?"

பதில் சொல்லாமல் பெரும் சப்தமாய்ச் சிரித்தாள்.

"சிஸேரியன் மரணம் தற்செயலானதா, திட்டமிட பட்டதா என்பதைப் பொறுத்திருந்து பார்! அதி கேள்விகள் கேட்காதே! மர்மங்களை அதன் அத போக்கில் விட்டு ரசி!"

"ஓ.கே.!"

சம்பந்தமில்லாத இரு குரல்களில் பேசிக் கொண்டிரு பாவனா சொந்தக் குரலுக்கு வந்தாள். தொண்டை நீவிவிட்டுக் கொண்டாள்.



"எனக்கு ஏதேனும் மனச்சிதைவு நோய் இருக்கிறதோ? அல்லது Multiple personality இருக்கிறதோ? நிஜம் போலவே சீரியல் சிஸேரியன் மரணங்கள் நடக்கப் போகிறதோ? அல்லது அது என் ஆழ்மன விருப்பமோ?

தலையை இறுகப் பிடித்துக் கொண்டாள் பாவனா. "ஆ! தலை பயங்கரமா வலிக்குதே!" மேசை இழுப்பறையைத் திறந்து இரு ஆஸ்பிரின்களை உரித்து விழுங்கினாள்.

"கடவுளே! கொஞ்சம் கொஞ்சமாய்ச் சாத்தானாய் மாறிக் கொண்டிருக்கும் என்னைக் காப்பாற்று! என்னிடமிருந்து மற்றவர்களைக் காப்பாற்று!"

சொல்லியபடி டீ-சர்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு பொம்மையை எடுத்தாள் பாவனா. கைக்கு மாற்றி மாற்றி விளையாடினாள்.

பின் மெதுவாக மிக மெதுவாகக் குழந்தைப் பொம் மையின் தலையை முறித்தாள் பாவனா!

## 9

வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம்
பட்டியல் போடு என்றதும்
எழுதிக் கொண்டே வ
அபி கேட்டாள்.
"அம்மா-அப்பா பெயனை
எழுதலாமா?"

- பா. சத்தியமோகன்

ஸிஜா, பாவனாவின் அறைக்குள் பிரவேசித்தாள். உட்புறமாகத் தாழிட்டாள்.

அறைச்சுவர் முழுவதும் குழந்தை ப்ளோ-அப்கள். சுவரை ஒட்டிய நைலான் கொடியில் பாவனாவின் ஆடைகள் துவைத்துப் போடப்பட்டிருந்தன.

படுக்கையில் ஒரு கரடிப் பொம்மை.

முகம் பார்க்கும் கண்ணாடி இணைந்த மேஜையில் நர்த்தனப் பிள்ளையார். பிள்ளையாருக்கு அருகே ஏராளமான மாத்திரைகள் இறைந்து கிடந்தன.

ஒரு மாத்திரை ஸ்ட்ரிப்பை எடுத்துப் பார்த்தாள் ஸிஜா. மே பி மன வியாதிக்கான மாத்திரையாக இருக்கும். மீண்டும் அதனை மேஜையில் விசிறினாள்.

சூட்கேஸுக்கு நடந்தாள். மாஸ்டர் கீ ஓபனர் வைத்துத் திறந்தாள். உள்ளே நூற்றுக்கணக்கான குழந்தைப் பொம்மைகள் படுத்துக் கிடந்தன.

பொம்மைகளுக்கு இடையில் ஏராளமான புத்தகங்கள் காணக் கிடந்தன. ஒரு புத்தகத்தை எடுத்தாள்.

கவிஞர் செல்லகணபதியின் "பாப்பா! பாட்டுப் பாடுவோம்!"

புத்தகத்தைத் திறந்து நோட்டமிட்டாள்.

ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி
அடடா மழையில் நனையாதே
மாட்டிக் கொண்டால் மழையால் உனக்கு
வருமே தும்மல் ஏராளம்
பாட்டி தருவாள் மருந்தை-அதுவும்
பாகற்காய்போல் கசப்பாகும்
ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி
அடடா மழையில் நனையாதே!

கவிதையிலுள்ள எளிமையையும் இசைநயத்தையும் ரசித்தாள் ஸிஜா. இதுமாதிரியான புத்தகங்களின் அருமை பாவனாவுக்குத் தெரிந்திருக்கிறது ஆச்சரியம்தான்.

பாவனாவின் படுக்கையைச் சோதனை செய்தாள் ஸிஜா. தலையணைக்கு அடியில் ஒரு கறுப்பு நிற டைரி கிடைத்தது.

டைரியை பிரித்துப் பக்கங்களை வாசிக்க ஆரம்பித்தாள் ஸிஜா.

***01.08.2000***

நானும் தோழிகளும் பிரசவ வார்டுக்குச் சென்றோம். அடடா! எத்தனை வகையான கர்ப்பிணிப் பெண்கள்! கடவுள் மிகச் சிறந்த ஓவியன்! தனது தூரிகையைக்



கொண்டு தாய்மை என்கிற வண்ணத்தைப் பெண்களின் உடல் முழுக்க விசிறியுள்ளானே! காமத்தின் பலன் கர்ப்பம். ஆனால் கர்ப்பத்தின் பலன் போன்ஸாய் இறைமை.

பாலுடன் உயிரைக் கரைத்துப் புகட்டக் காத்திருக்கும் தழைத்த மார்பகங்கள். அம்னியாட்டிக் திரவத்தில் ஏத்தலக்கா பூத்தலக்கா ஆடும் மூன்று கிலோ சொர்க்கங்கள். நடமாடும் முருகன் கோவில்களாய்த் தாய்மார்களின் புடைத்த வயிறுகள்.

கர்ப்பிணிப் பெண்களின் கையில் காணப்படும் கண்ணாடி வளையல்கள் வசுந்தராதாஸ் குரலில் சிணுங்கும். பொத்திப் பொத்தி நடக்கும் கால்களில் கிடக்கும் கொலுசுகள் உஷா உதுப் குரல் எழுப்பும்.

தலைச்சன் குழந்தை பெறும் தாய்மாருக்கும் இரண்டாவது, மூன்றாவது குழந்தை பெறும் தாய்மாருக்கும் எத்தனை எத்தனை வித்தியாசங்கள் நடவடிக்கைகளிலும் அணுகு முறைகளிலும்!

போர்க்களத்துக்குப் போகப் பயப்படும் இளைஞனின் மனநிலை - தலைச்சன் குழந்தை பெறும் தாய்மாருக்கு. பயம்,. பயம். எதனைக் கண்டாலும் பயம். "நான் பிரசவத்ல செத்துட்டா என் தங்கச்சியத் தவிர வேற யார வேணாலும் கட்டிக்க புருஷா!", என உளறல் புருஷனிடம், முகமும் கால்களும் சுரந்திருக்கும். பிரசவ வேதனையை அனுபவித்து அல்லது மிகைத்து வீறிடுவர்.

இரண்டாவது குழந்தை பெறும் தாய்மார்களின் நடவடிக்கை தலைகீழாக இருக்கும். மருத்துவமனையை அல்லோ கல்லோலப்படுத்தும் முதல் பிரசவத் தாய்மார் களைப் பார்த்துப் "பாரேன்! ரொம்பத்தான் அலட்ராள்க. ஊர் உலகத்ல எவளுமே புள்ளை பெறல பாரு. ஓவியமா இவதான் பெர்றா! நாங்க எல்லாம் முத பிரசவத்ல எவ்ளோ பதவிசா (ரீல் ரீல்) நடந்துக்கிட்டம்!,"கமென்ட் அடிப்பர்.

குழந்தை குளிப்பாட்டும் இடமிருக்கிறதே! அதைப் பார்த்தாலே பரவசம்! அழுகை, சிணுங்கல் வீறல் செய்யும் கறுப்பு, வெள்ளை, மாநிற, சந்தன, ரோஜா நிறக்

குழந்தைகள்! குழந்தைகளின் நிர்வாணம் கடவுள் தரிசனம்.

பிறந்த குழந்தைகளின் மலம் ரம்மியமான மஞ்சள் நிறமாய் இருக்கும். அவையின் உமிழ்நீரில் தாய்ப்பால் கலந்து சுகானுபவ வாசனைத் திரவமாகும்.

**20.08.2000**

இன்று எனக்கும் பூங்கிக்கும் வாய்த் தகராறு. பூங்கொடி ரொம்ப அறிவாளிதான். அதற்காக என்னைப் போன்ற சுமார் பெண்களை அவமானப்படுத்தலாமா அவள்? மகப்பேறு மருத்துவம் சம்பந்தமாக விரிவுரையாளர் ஒரு கேள்வி கேட்க - நான் தவறாகப் பதில் சொல்ல பூங்கொடி கிண்டலாகச் சிரித்தெழுந்து சரியான பதில் கூறினாள்! எனக்குப் பெருத்த அவமானம், பூங்கொடியைத் தொடர்ந்து அனைத்து மாணவிகளும் சிரித்தனர்.

தொடர்ந்து விரிவுரையாளர் சொன்னதுதான் அவமானத்தின் உச்சம்.

"ஒருத்தருக்கொருத்தர் உள்ளாடைகளைக் கூட இரவல் வாங்கிக் கொள்கிறீர்கள். கொடுத்துக் கொள்கிறீர்கள்! பூங்கியிடமிருந்து சிறிது அறிவும் இரவல் வாங்கிக் கொள்ளேன் பாவனா!"

மாணவிகள் மேசையைத் தட்டி ஆர்ப்பரித்தனர்.

**04.09.2000**

எனக்கு என்ன ஆயிற்று? எந்தக் குழந்தைகள் எனக்குத் தெய்வங்களாகத் தெரிந்தார்களோ- அந்தக் குழந்தைகள் இன்று எனக்குச் சாத்தான்களாகத் தெரிகிறார்கள்! "நேசிப்பின் உச்சம் வெறுப்பு" என்று சிக்மன்ட் ஃப்ராய்ட் சொல்வது இதைத்தானோ? குழந்தைகளின் சிணுங்கல் காது ஐவ்வைக் கிழிக்கும் பேரோசையாய்க் கேட்கிறதே! ஆண்-பெண் உறவின் காம தகனம் - குழந்தை ஜனனம். குழந்தை பிறப்பில் மனிதரின் சுயநலமும் இயற்கையின் மனித இனம் தொடரும் விருப்பமும்தான் தெரிகிறது!

**08.10.2000**

நான் (அ) பாவனா எத்தனை பெண்? எனக்குள் ஏன் இத்தனை முரண்பாடான எண்ணங்கள்! ஒரே சமயத்தில் என்னை நான்கைந்து பெண்களாக உணர்கிறேன். ஒரு



பாவனா தண்மையின் பிரதிநிதி. ஒரு பாவனா தாய்மைக்கு எதிரி. ஒரு பாவனா குதர்க்கவாதி. ஒரு பாவனா உலகின் எல்லா விஷயங்களையும் எதிர்க்கும் தீவிரவாதி. எனக்குத் தெரியாமல் எனக்குள் இன்னும் எத்தனை பாவனாக்களோ?

நேற்றிரவு பரணில் பூனைக் குட்டிகள் சப்தம். இடைவிடாது தாயைக் காணாது கத்துகின்றன. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு ஆறு பூனைக் குட்டிகளை அள்ளிப் போய்க் குப்பைத் தொட்டியில் எறிந்தேன். இன்று காலை பார்க்கிறேன். ஆறில் நான்கு மரணம். பூனைக் குட்டிகளாக இருந்தாலும் கொலை கொலைதானே? அப்படியென்றால் நான் நான்கு கொலைகள் செய்த கொலைகாரிதானே?

**11.11.2000**

இன்று ஒரு எய்ட்ஸ் நோயாளிப் பெண்ணுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் இரத்தம் எய்ட்ஸ் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. மாலையில் ரிசல்ட் வந்தது. குழந்தைக்கும் ஹெச்.ஐ.வி. பாஸிட்டிவ்!

எய்ட்ஸ் வந்த பின்னும் குழந்தை பெற்றுக் கொள்ள அந்தத் தாய் விரும்பியது மகாக் கொடூரம்.

துறைத் தலைவர் அந்தத் தாயிடம், "கவலைப்படாதே, எய்ட்ஸ்க்கு எதிரான மருந்துகள் நிறைய வந்துவிட்டன. உன் ஆயுளுக்கு உத்தரவாதம் அளிக்க முடியாவிட்டாலும் உன் குழந்தை அதிக பட்சம் பத்து வயது வரை வாழ நான் உத்தரவாதம் அளிக்கிறேன்!" என்றார்.

எய்ட்ஸ் தாய் முகத்தில் சூரியன். எனக்கோ அவளையும் அவளின் குழந்தையையும் கொன்றுவிடக் கை பரபரத்தது.

**17.11.2000**

எய்ட்ஸ் தாயும் அவளது குழந்தையும் இறந்து கிடந்தன. யார் கொன்றது? நானா? நான் செய்ததாக நினைவில்லையே? பின்னே யார்தான் அவர்களைக் கொன்றது?

**24.08.2001**

மல்லிகை மருத்துவ மனைதிறப்பு விழா.

நார்பர்ட் எபிஸோடு. எனக்கு சந்தோஷம். எனக்கு வருத்தம். எனக்குள் நிச்சலனம். மூன்றில் எந்த உணர்வு உண்மையானது?

***30.08.2001***

இன்று மருத்துவ மனை வராண்டாவில் தலை முறிக்கப்பட்டு ஒரு குழந்தைப் பொம்மை கிடந்தது என்னைப் போலவே குழந்தைப் பொம்மை சேகரித்து கழுத்தை முறிக்கும் புண்ணியவதி யார்? புண்ணியவதியா புண்ணியவதிகளா? இது ஸைக்கோக்கள் காலமோ?

***13.09.2001***

இன்றைய ஒரு சிஸேரியன் ஆபரேஷனில் தாயும் சேயும் மரணம். கலாட்டா செய்த கணவனை நைச்சியமாய் அமைதிப்படுத்தினான் சூரி. சூரியைப் பூங்கி காதலிக்கிறாள் போல. சூரி எங்களுக்கு அஞ்சாறு வருஷம் சீனியர். இன்னும் கல்யாணம் பண்ணாமலா இருப்பான்? ச்ச - சூரி அழகாக கம்பீரமாக இருக்கிறான். எனக்கும் சூரியின் மீது ஒரு கண்தான். அவன் எனக்குக் கிடைக்கவில்லையே?

***30.10.2001***

அடிக்கடி பூங்கியையும் சூரியையும் ஜோடியாகப் பார்க்கிறேன். சந்தேகமே இல்லை. அவர்களது நட்பு காதல்தான். அவர்களின் காதலைக் கெடுக்க நான் ஏதாவது செய்தாக வேண்டுமே. என்ன செய்யலாம்?

***13.11.2001***

மல்லிகை மருத்துவ மனைக்குள் ஒளிந்திருக்கும் இரகசியங்களை ஆராய ஸிஜா வருகிறாளாம்! இம்முறை ஸிஜா உயிர் தப்புவது சிரமம்!

வாசலில் காலடி அரவம் கேட்டது. நிமிர்ந்தாள் ஸிஜா ஸில்-அவுட்டில் ஒரு பெண் உருவம்.

"என் அறைக்குள் என்ன செய்கிறாய்?"

பாவனாவின் குரல்!

''உன்னை உன் மனநோயிலிருந்து காப்பாற்றப் போகிறேன்!"

உருவத்தின் ட்ராங்குலைஸர் துப்பாக்கி சீறியது. ப்ப்ச்சக்

ஸிஜா மயங்கிச் சரிந்தாள். உருவம் குனிந்தது. அதன் கையில் பளபளக்கும் கத்தி கூத்தாடியது.